1252
1252

சந்திரோதயம்

OFFICE OF THE REGIST...
14 SEP 1940
MA...

SCANNED

பேபி சரோஜா

CHANDROTHAYAM

15-9-1940

உள்நாடு விலை அணு 0—1—6
வெளிநாடு விலை சதம் 10

"பிரமாதமான முறையில் கையாளப்பட்ட
பெரிய விஷயம்"

...ள் பார்க்கவேண்டும்

தானசூரகர்ணு

கர்ணனுக்கு பணம், செல்வாக்கு, ராஜ விஸ்வாசம் எல்லாம் அவனுக்கிருந்தது. ஆயினும் அவன் துயருற்றிருந்தான். ஏன்? துவாரகநாத்தின் தமிழ்ச் சித்திரம் **தானசூரகர்ணுவில்** இதற்கு விடையைப் பாருங்கள்.

★

அவன் கொடையாளி. கடவுள் அவனுடைய சக்தி பூராவையும் கவர்ந்து கொண்டார். இந்திரன் அவன் கவசத்தைப் பறித்துவிட்டான். கிருஷ்ணன் குண்டலங்களை தானமாக பெற்றுக் கொண்டார். அவன் தீர்மானத்தைப் பாழாக்கினர். அவன் உயிரையும் கவர்ந்து விட்டார். அவன் தாய் இரண்டு வரங்களைப் பெற்றுள். எப்படி? ஏன்?

★

துவாரகநாத்தின் மகத்தான தமிழ் புராணப் படத்தில் பாருங்கள். மகத்தான கதை. சிறந்த நடிகர்கள். பிரமாதமாகக் கையாளப்பட்டது. எல்லாம் துவாரகநாத்தின் மகத்தான சங்கீத படத்தில் தான்.

— நடிகர்கள் —

டி. எஸ். சந்தானம்
ஸ்ரீமதி எம். எஸ். திரிபுராம்பா
மற்றும் பலர்

— டைரக்ஷன் —

துவாரக நாத்

உதவியாளர்
எச். எஸ். கிருஷ்ணசாமி

— ஸ்டுடியோ —
எம். பி. பி. ஸி. லிமிடெட்.

சென்னை பிராட்வே டாக்கீஸில்

குதூஹல ஆரம்பவிழாவை எதிர்பாருங்கள்!

KINGS

ரூ. 5,000 இ

321 பரிசுகள்

உங்கள் தேக பாதைகளை ஒழிக்க

காபின் ஆஸ்பிரி

உபயோகியுங்கள்.



3 பில்லைகள் ஒரே அணா.

2 அணாவுக்கு உங்களுக்கு இந்த கார் கிடைக்கலாம்.

கூபன் பெரும் விதம்

இரண்டு "கிங்ஸ்" காபின் ஆஸ்பிரின் பாக்கெட் வாங்குபவர்களுக்கு ஒரு கூப்பன் இனாமாக அளிக்கப்படும்.

எச்சரிக்கை

இந்த கூப்பன்களை நீங்கள் கிங்ஸ் காபின் ஆஸ்பிரினை வாங்கும் பொழுது, மறந்து போகாமல் வியாபாரிகளை கேட்டு வாங்கிக் கொள்ளவும்.

பரிசு விவரம்

1-வது பரிசு... ரூ. 3300 விலையுள்ள ஒரு 8 H. P. மோட்டார் கார்.

2-வது பரிசு...ரூ. 400 விலையுள்ள ஒரு ரேடியோ.

3-வதுபரிசு......ரூபாய் 100 பெறுமான 4-காஷ் வவுச்சர்கள். தேவையான 100 ரூபாய் பெறுமான சாமான்களை எங்கு வேண்டுமானாலும் பெறலாம்.

4-வது பரிசு......ரூ. 50 பெறுமான 5-காஷ் வவுச்சர்கள். தேவையான ரூ. 50 பெறுமான சாமான்களை எங்கு வேண்டுமானாலும் பெறலாம்.

5-வது பரிசு......ரூ. 20 பெறுமான 10-காஷ் வவுச்சர்கள். தேவையான ரூ. 20 பெறுமான சாமான்களை எங்கு வேண்டுமானாலும் பெறலாம்.

6-வது பரிசு......300 "கிங்ஸ்" பழரசப் பாட்டில்கள் ஒவ்வொன்றும் 26 அவுன்ஸ் அளவுள்ளதும் ரூ. 1-8-0 மதிப்பும் கொண்டது.

பிரைஸ்களெல்லாம் **1941**-ம் வருஷம் ஜனவரி மாதம் அளிக்கப்படும். கூப்பன்களை யெல்லாம் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள்.

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—H. M. கிங் அண்டு ஸன்ஸ், பம்பாய்—21
மதராஸ் ஸ்டாகிஸ்டுகள் :—ராஜகோட் டிரேடிங் கம்பெனி, பந்தர் தெருவு.
R. அப்துல் அஸீஸ் அப்துல் சமாத் அண்டு கம்பெனி, பந்தர் தெருவு.
ராகவலால் அண்டு கம்பெனி, ஸ்டிரிங்கர் தெருவு.

எங்கும் ஏஜெண்டுகள் தேவை. G. G. S/H, M. K. 2.

...ப மஹாராஜா

...ன்னையும், என் உயிரையும், என்னிடமுள்ள சகலவற் ...ம மைசூர் மக்களின் சேவைக்கே அர்ப்பணம் செய்வதாக, ...ன் மூதாதையர் அமர்ந்த சிம்மாசனத்தில் நான் அமர்கையில் கருதுகிறேன்......என்னுடைய முயற்சிமட்டும் வெற்றியடையாது என்பதை நான் அறிவேன். உங்களுடைய ஒத்துழைப்பு, அன்பு, நம்பிக்கை ஆகிய அத்தனையும் எனக்கு வேண்டும். உலகமுழுதும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஒற்றுமையாக இருந்து தியாகம் செய்வதன் மூலம்தான் இதை நிவர்த்திக்க வேண்டும். என்னுடைய புனிதமான கடமைகளை வெற்றிபெற நிறைவேற்ற, கடவுள் எனக்குப் பலமும், ஞானமும் அருளட்டும்; என் பிரஜைகள் க்ஷேமமாக இருக்கவும் ஈசன் கருணை செய்வாராக!''

இம்மாதம் 8-ந் தேதியன்று மைசூர் சமஸ்தானத்தின் பொற்சிம்மாசனத்தின்மீது அமர்ந்த, மைசூர் மஹாராஜா ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் மேற்கண்ட நல்ல செய்தியைத் தன் பிரஜைகளுக்கு ரேடியோ மூலம் தெரிவித்தார்.

இப்படிச் சொல்வதற்குப் பரந்த நோக்கமும், உயர்ந்த லக்ஷியமும், நல்ல எண்ணமும், தேசப்பற்றும் மிகமிகத் தேவை. ஸ்ரீ ஜெயசாமராஜ உடையாரிடம் இந்த அரிய குணங்களெல்லாம் அமைந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

வயதென்னமோ இவருக்குச் சிறுவயதுதான். இருந்தாலும், ஏராளமான கல்விச் செல்வத்தை உடையவர். பலதேசங்களுக்கும் சென்று உலக அனுபவத்தை மிகுதியும் பெற்றிருக்கிறார். இதையெல்லாம் பார்த்தால் இவர் தம் ராஜ்யபாரத்தைத் திறமையுடன் நடத்துவார் என்றுதான் தோன்றுகிறது. இவர் சிம்மாசனம் ஏறிய கொண்டாட்டத்திற்காக, மைசூர் சிறையில் இருந்த ராஜீயக் கைதிகள் எல்லோரும் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். இதுவும் மஹாராஜாவின் உயர்ந்த லக்ஷியத்தைக் காட்டுகிறது.

மைசூர் இதர சமஸ்தானங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது. கைத்தொழில் துறையிலும், அரசியல் உரிமைகளிலும் மற்றவைகளைவிட மைசூர் முன்னணியில்தான் நிற்கிறது.

ஆனல் சமஸ்தான உலகில் ஒரு நவ யுகத்தை எ
மட்டும் போதுமா?

இந்தியாவின் இதர சமஸ்தானங்களுடன்
மைசூரின் ஜோதி அதிகமாய்த்தான் இருக்கிற
நக்ஷத்திரங்களுக்கு முன் சந்திரன் பிரகாசிப்பதுபே
சூரியனுக்குமுன் சந்திரன் ஒளி என்ன வாகிறது?

ஆகவே மைசூரின் பெயர், சமஸ்தான சரித்திரத்
முதல் ஸ்தானம் வகிக்கவேண்டுமானல் மோசமான சமஸ்தா
களுடன் தன்னை ஒப்பிட்டுத் திருப்திப்படாமல் மைசூர்,
பொறுப்பாட்சி உள்ள பிரிட்டிஷ் மாகாணங்களுடனும், சமஸ்தா
னங்களுடனும் தன்னை ஒப்பிட்டு நோக்கி, அவைகளுக்கு இணை
யாக முன்னுக்குவர முயலவேண்டும்.

பிரிட்டிஷ் மாகாணங்களில் எப்படிப் பொறுப்பாட்சி ஏற்பட்டிருக்கிறதோ, அதேபோல் 'அவுந்த்' என்ற சிறு சமஸ்தானத்திலும் பொறுப்பாட்சி நடந்து வருகிறது.

அங்கே ஜனங்கள்தான் மஹாராஜாவின் தலைமையின் கீழ் பொறுப்பாட்சியைத் திறமையுடன் நடத்துகின்றனர். அப்படியிருந்தும் அங்கே சர்க்கார் தலைகீழாக ஆய்விடவில்லை.

அவுந்த் சமஸ்தானம் ரொம்ப ரொம்பச் சிறியது. ஆனல் அதன் லக்ஷியமோ மிகமிகப் பெரியது. பொறுப்பாட்சி கொடுப்பது, சமஸ்தானங்கள் பிரிட்டிஷாருடன் செய்துள்ள ஒப்பந்தத்துக்கு விரோதமானதென்றோ, கொஞ்சங் கொஞ்சமாய் உரிமை வழங்குவதுதான் ஜனங்களுக்கு நலம் என்றோ, நானும் என் பிரஜைகளுக்குப் பொறுப்பாட்சி கொடுக்கவில்லை; நீங்களும் பிரிட்டிஷ் இந்தியாவுக்குக் கொடுக்காதீர்கள் என்றோ பின்னேற்றமான வார்த்தைகளைக் கூறவில்லை, அவுந்த் மஹாராஜா.

அரசனுக்காகப் பிரஜைகள் இல்லையென்றும், பிரஜைகளுக்காகத்தான், அரசன் இருப்பதென்றும் அவுந்த் ராஜா நன்கு உணர்ந்தார். அடுத்தபடி ஜனங்களிடம் பொறுப்பாட்சியையும் கொடுத்துவிட்டார்.

ராஜா வைத்ததுதான் சட்டம் என்று ஒரு காலத்தில் இருந்தது. அந்தக் காலம் மலையேறி, இப்பொழுது ஜனங்கள் இட்டதே சட்டம் என்று சொல்லும்படி காலநிலை மாறிவிட்டது. ஆனல் இப்பொழுதுகூட, இந்த மாறுதலை அறியாத ராஜாக்கள் நம் நாட்டில் அனேகம் பேர் இருக்கின்றனர்.

ஆனல் மைசூரின் புதிய ராஜாவான ஜெயசாமராஜ உடையார் மேற்கண்ட ராஜாக்களின் கோஷ்டியில் சேர்ந்தவரல்ல என்று தாராளமாய்ச் சொல்லலாம்.

உலகப் போக்கை இவர் தெளிவாக உணர்ந்தவர். காலத்தின் மாறுதலை அறிந்தவர். பழைய மக்கிப்போன கொள்கைகளிலும் பற்றுக்கொண்டவரல்ல. அதிகார வெறிகொண்டு, அதிலேயே விழுந்து தவிப்பவருமல்ல.

ஆகவே ஜனங்களின் மனப்போக்கையும், உலகத்தின் நிலையையும் கவனித்து நல்ல நல்ல மாறுதல்களை அவரால் செய்யமுடியும். மைசூர் சரித்

பெயர் புதியவகையில் அழியாது இருக்க வேண்டுமானல் ய்துதான் ஆகவேண்டும். அவருடைய பிரஜைகளும் புவதாய்த் தெரிகிறது.

னங்கள் மிகுந்த ராஜவிசுவாசம் படைத்தவர்கள். மகாராஜா ் கீழ் பொறுப்பாட்சி வேண்டுமென்பதே அவர்களின் முக்கிய

ஜகளின் ஆனந்தமே ராஜாவின் ஆனந்தம்; அவர்கள் சுகமே ராஜா கம். ஜனங்கள் சிறப்புடன் வாழ்ந்தால் ராஜாவும் க்ஷேமமாக கலாம்.

எனவே மைசூரைப் பிற்போக்கான சமஸ்தானங்களுடன் ஒப்பிட்டுப் பாராமல், அவுந்த் சமஸ்தானம் போன்றவைகளின் போக்கை கவனித்து, தமது பிரஜைகளுக்கும், அவர்கள் கோருவதை அளித்துப் புதிய ஆட்சியை, ஸ்ரீ ஜெயசாமராஜா ஆரம்பித்துவைத்து, பிரஜைகளின் பூரண நட்பைப் பெற்றுக் கீர்த்தியுடன் விளங்குவார் என்று நம்புகிறோம்.

"எஸ். வி. வி." எழுதியது.

வாழ்க்கையே வாழ்க்கை

21-வாழ்க்கைச் சித்திரங்கள் ரூ. 1—0—0

30—11—40 வரையில் விலை அணா. 8.

(தபால் செலவு 0–2–6 வி. பி. கிடையாது.)

மாதவீ கங்கணம்

ரமேச சந்திரர் எழுதிய அரிய நாவல்

வே. கா. ராமநாதன், பி. ஏ., பி. எல்.

இனிய எளிய தமிழில் மொழிபெயர்த்தவர்:

தொகுதி I (1, 2-ம் பாகங்கள்) விலை ரூ. 2—0—0

தொகுதி II (3, 4-ம் பாகங்கள்) விலை ரூ. 1—4—0

(தபால் செலவு, வி. பி. செலவு 0—12—0)

இன்னும் எங்களிடம் எல்லா நூல்களும் கிடைக்கும்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

சுற்றுப்பு

ஏதாவது நடந்தால்

அமெரிக்காவில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சொந்தமாயுள்ள குடியேற்ற நாடுகளையும் இதர தேசங்களையும் தற்காலிகமாக நிருவகித்து வருவதற்காக அவசரக்கமிட்டி யொன்றைக் கூட்டுவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்தக் கமிட்டியை ஏற்படுத்தும் விஷயம் ஹவானா மகா நாட்டில் தீர்மானிக்கப்பட்டது. உதவி அரசாங்க மந்திரியான மி. ஸம்னர் வெல்ஸ் இதில் அமெரிக்க ஐக்கிய ராஜ்யத்தின் அங்கத்தினராயிருப்பார். இதன்றி மற்ற அமெரிக்க நாடுகளின் ராணுவப் பிரதிநிதிகளுடைய கூட்டமொன்று தென் அமெரிக்காவில் நடக்கப் போகிறது. அமெரிக்க ஐக்கிய ராஜ்யத்தின் ராணுவ ஏற்பாடுகளைப் பரிசீலனை செய்வதற்காகத்தான் இது நடக்கப் போவதாகத் தெரிகிறது. ஆனால் இன்னும் பெரிய விஷயங்களெல்லாங்கூட கவனிக்கப் படுமென்று சொல்வதற்கிடமில்லாமலில்லை.

இதற்கு மேலே, வழியிலே சிங்கப்பூரைப் பார்த்துக் கொண்டு நியூஜீலந்துக்குப் பறந்து செல்லும் அமெரிக்கப் பத்திரிகைக்காரர்களின் கோஷ்டியொன்றினிடமிருந்து ஒரு செய்தி வருகிறது. அந்த முக்கியமான கடற்படைத் தளத்துக்கருகிலுள்ள இடத்திலே, ஏதாவது நடக்கும் பட்சத்தில் அமெரிக்க ஐக்கிய ராஜ்யத்தின் கப்பற்படைக்கு அது தளமாக உதவக் கூடுமென்று உணரப்படுகிறது.

அடையாளம் தெரியவில்லை

கடற்கரைப் பாதுகாப்புக்காக வைக்கப் பட்டிருந்த பிரிட்டிஷ் விமானப்
படையைச் சேர்ந்த ஒ
பகைவரின் நீர் மூழ்கிக
பிடிப்பதில் நல்ல வெற்றி
கிறது. கப்பல்களுக்குத் துணை
செல்வதையே முக்கிய வேலை
உடைய இந்தப்படை கப்பல்களுக்கரு
கில் பதுங்கிக் கிடந்த ஒன்பது நீர் மூழ்கிகளை இரண்டு மாதத்தில் தாக்கியிருக்கிறது. அவைகளில் இரண்டு அழிந்து போயிருக்க வேண்டும்; இன்னும் மூன்று சேத மடைந்திருக்க வேண்டும்.

ஜெர்மன் விமானிகள் தங்கள் சகாக்களையே எதிரிகளென்று நினைத்து ஒருவர் விமானத்தை யொருவர் அடிக்கடி சுட்டு வீழ்த்திக் கொண்டிருப்பதால் ஜெர்மனியர் இப்போதெல்லாம் தங்கள் சண்டை விமானங்களுக்குத் தெளிவாய் வர்ணம் கொடுக்கிறார்கள்; நேற்றோ என்னவோ, ஸ்பிட்பயர் விமானி ஒருவர் இரண்டு 'மெஸ்ஸர்ஷ்மிட் 109' விமானங்களில் அருகிலிருந்ததைத் தாக்கப் போனார். அதற்குள் பின்னாலிருந்த மற்றொரு மெஸ்ஸர்ஷ்மிட் விமானமே வந்து அதைச் சுட்டு வீழ்த்தி அவருக்கு ஒத்தாசை செய்தது! காச்சு மூச்சென்று நடக்கும்விமானச் சண்டையில் 'ஹீங்கெல் 113' விமானத்தையோ 'மெஸ்ஸர்ஷ்மிட் 109' விமானத்தையோ பிரிட்டிஷ் சண்டை விமான மென்று தப்பிதமாய் நினைத்துக்கொள்வது வெகு சுலபம்.

ஜெர்மனி முற்றுகையிடவா!

பிரிட்டனைப் பொருளாதார முற்றுகை யிட்டிருப்பதாக ஜெர்மனி அறிவித்ததைக் கேட்டுப் பெரும்பாலான துருக்கிப் பத்திரிகைகள் கேலி செய்கின்றன.

முற்றுகை! இது ...யாத முற்றுகை!" ...பத்திரிகை. "கடல் ...திக்கம் செலுத்தும் ... வைத்துக் கொண்டு ...ங்கள் முற்றுகையை ...ள். ஜெர்மன் முற்றுகை ...ம் எட்டுச் சுரைக்காயா ...ருக்கிறது. ஆமாம், இப் ...துதான் ஜெர்மனி பிரிட்டனை ...றுகையிட்டிருப்பதாக அறிவித்திருக்கிறது. ஆனல், உண்மையில் யுத்தம் மூண்டது முதலே அது பிரயத்தனப்பட்டுத்தானே வருகிறது!" என்று அது பின்னும் கூறுகிறது.

"யேனி ஸாபா" என்னும் பத்திரிகை, "பிரிட்டனை முற்றுகையிடுவதன்மூலம் யுத்தத்தைச் சுருக்கி விடலாமென்று உலகம் நினைக்குமானல் அது நீண்டகாலம் காத்திருக்க வேண்டியதுதான். முற்றுகையிடுவதாகச் சொல்லுவதென்னமோ, வெகு சுலபம்; சந்திரமண்டலத்தைக் கூட முற்றுகையிடுவதாகக் கூறலாம்; ஆனல் அதைக் காரியத்திலே நடத்துவது வேறே விஷயம். பிரிட்டனை வெற்றிகாமாக முற்றுகையிட ஜெர்மனிக்கு வகையிருப்பதாக விஷயந் தெரிந்தவர் யாருமே ஒத்துக் கொள்ள முடியாது.

எகிப்து மந்திரி சபை

மந்திரி சபை ராஜிநாமா செய்து விட்டதாக ஒன்றும் நடக்காததற்கு முன்பே செய்திகள் வெளியானதால் இங்கே கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் ஹாசன் ஸாப்ரிபாஷா ராஜிநாமா தரவேயில்லை.

இருப்பதற்குள்ளே மிகவும் பெரிய ராஜீயக் கட்சியான எகிப்து கட்சி ஆதரிக்கக் கூடியபடி ஏதோ ஒருவித சர்க்கார் இருக்க வேண்டுமென்பது தான் பிரதம மந்திரி விரும்பியது. இந்த நோக்கத்தோடு அவர் சீக்கிரமே தமது மந்திரி சபையை மாற்றியமைக்கலாம். தற்போதுள்ள சபையில் வப்துக்கு விரோதமானவர்கள் மூன்று, நான்கு பேர் இருக்கிறார்கள். அவர்களை அவர் விலக்கி விடலாம்; அப்போது அவர் சர்க்காரை வப்து ஆதரிக்கும். இந்த நோக்கத்தோடு தான் இப்போது பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன.

ஹிட்லர் கை வரிசை

"ஆகஸ்ட் 26-ந்தேதியன்று லண்டனில் நெடுநேரம் நடந்த விமானத் தாக்குதலின் நோக்கம் எவ்வளவு தொந்தரவு கொடுக்க முடியுமோ அவ்வளவும் கொடுக்க வேண்டியதைத் தவிர வேறென்றுமில்லை, என்று இங்கிலாந்திலுள்ள அமெரிக்க நிபுணர்கள் எல்லாரும் நினைக்கிறார்கள். இரவிலே ஜனங்களின் தூக்கத்தைக் கெடுப்பது தானு ஹிட்லர் செய்யக் கூடியது என்று அமெரிக்கர்கள் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். இங்கிலாந்தின் மீது உண்மையான தாக்குதல் ஆரம்பித்து விடப்போகிறது என்று ஐந்தாவது தடவையாகவோ ஆறுவது தடவையாகவோ, பெர்லினில் அறிவித்திருக்கிறார்கள். பூச்சாண்டி காட்டுவதிலே நாஜிகள் கை தேர்ந்தவர்கள் என்பது இதனால் இன்னுங் கொஞ்சம் நன்றாய் விளங்குகிறது. கொஞ்சகாலத்துக் கொருமுறை இப்படிப் பயங்காட்டுவது கேலிக் கூத்தாகத்தான் போய் விட்டது. குண்டெறிவதிலே நாஜியர் எவ்வளவு சோடைகள் என்பதையும் அமெரிக்கர்கள் உணர்ந்து கொண்டார்கள். ஏதோ குருட்டாந் தசையாய்ப் பட்டால் தவிர ஜெர்மன் குண்டுகள் சரியாய்த் தாக்குவதில்லை. என்றுதான் சாதாரண மக்கள் நினைக்க வேண்டியதிருக்கிறது" என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

சாஸ்திரிகள் விஷயம்

ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் திருக் கல்யாண மஹோற்சவத்திற்கு வந்திருந்த ஜனங்களின் எண்ணிக்கை ஒரு கணிக்கிலேயே அடங்காதாம்-உளுந்து போட்டால் அது கீழே விழுவதற்குக் கூட இடமில்லையாம்.

அதுபோலவே அவ்வளவு கும்பல் அவருடைய கதையைக் கேழ்க்க வந்திருந்தது.

நமது சந்திரோதயத்தில் அடிக்கடி கதை எழுதுகிருரே டி. ஆர். பந்துலு, அவர் மேற்கு மாம்பலத்தில் வெங்கடாசலையர் தெருவில் இருக்கிருர். அத் தெருவில் அவரும், மற்றும் பலரும் நடத்தும் சபையொன்று இருக்கிறது. அதில் பிரம்மஸ்ரீ வெங்களத்தூர் எஸ். மணி சாஸ்திரிகள் பிரதி தினமும் வால்மீகி—கம்ப ராமாயணங்களை கலந்து உபந்யாசம் செய்கிருர். அதைப்பற்றித்தான் சொல்லுகிறேன்.

என்ன கும்பல்! சொல்ல முடியாது நன்ருகச் சொல்லுகி கம் புராணம்சொல்லு டிருக்கிறேன். என்ன இவர் சொல்லுவதில்தா இருக்கிறது. அவ்வளவு பாமர ஜனங்கள் கூட ரவிக அளவிலும் சொல்லுகிருர்.

கதை சொல்லும் அந்த இரண்டு மணி நேரமும் நம்மை நாமே மறந்து போய்க் கதை கேட்டுக் கொண்டிருப்போம். புராணம் கேட்பதென்ருல் இப்படிப்பட்டவர்கள்தான் சொல்லக் கேழ்க்க வேண்டும்.

அவசியம் எல்லோரும் போய் ரயில் செலவானுல் கூடப் பராவயில்லை கேட்டு விட்டு வாருங்கள் உட்காருவதற்குக்கூட இடம் ரொம்ப ஜோராக இருக்கிறது.

பெண்களுக்கோர் யோசனே!

நீங்கள் என் பலவீனமாய் காணப்படுகிறீர்கள். தெரிகிறது உங்கள் சுகவீனம்தான் இதற்குக் காரணம் என்று. **கர்ப்ப எண்ணெய்** உட்கொள்ளுங்கள். கிரமந்தப்பிய மாதவிடாய், வயிற்றுவலி, இடுப்புவலி, தலை, கை கால் வலி, குடைச்சல், வயிறு பெருத்தல், பசியின்மை, சூதகக் கட்டு, முதலிய சகல வியாதிகளும் நீங்கி, சரீர சௌக்கியம் அடைவீர்கள்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0. தபால் சார்ஜ் வேறு.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S. I

பிராஞ்சு :—

1-54, அருணுசல நாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்

...னிமா வம்பு

"தேவி"

... முதலாளிகளில் பலர் ...வைஷ நடிகர்களைத் தமிழ்ப் ...ல நடிக்கவைத்து, கொச்சைத் ... பேசும்படி செய்து தமிழை முன்னேற்றம் செய்கின்றனர். ஆனால் ராயல் டாக்கீஸார் அந்த எண்ணத்துடன் சாந்தா ஆப்தேயைத் தங்கள் படத்திற்கு ஒப்பந்தம் செய்திருக்க மாட்டார்களென்றே நம்புகிறேன். இவர்கள் எடுக்கப் போகும் கதை "சாவித்திரி" என்ற புராணக் கதையாம். இப்படத்தில் வி. ஏ. செல்லப்பாவும் நடிப்பாரென்று தெரிகிறது.

* * *

சந்திராவதி என்பவள் ஒரு கிருஷ்ண பக்தை. ஆயினும் அவள் பதிதை என்று குற்றம் சாட்டப்பட்டு விடுகிறாள். தான் நிரபராதி என்று நிரூபிக்க சப்த ரிஷிகள் முன்பு பயத்துடன் நிற்கிறாள். தன் கலியாண தினத்தன்று மணமகன் அவளுக்குக் கிருஷ்ணனாகத் தோன்றுகிறான். சிவபெருமான் முன்பு தான் நிரபராதி என மன்றாடுகிறாள் சந்திராவதி. ஸ்ரீ செல்லப்பாதான் சிவபெருமானாய் நடிக்கிறார். நிஜ சிவனைப் போலவே நிஜப் பாம்பை இவர் மாலையாகப் போட்டுக் கொண்டபொழுது ஆச்சரியப்பட்டுப் போனேன். சாதனா பிலிம்ஸாரின் கிருஷ்ணகுமாரில் வரும் இக் காட்சி படம் எடுக்கப்பட்டு வருகிறது.

சாதனா பிலிம்ஸ் கிருஷ்ணகுமாரில்
ஸ்ரீ வி. ஏ. செல்லப்பா.

* * *

ஸ்டண்ட் படம் என்றால் உயிரைக் கொடுத்து டிக்கெட் வாங்கியாவது சென்று ரஸிக்கும் பொது ஜனங்கள் தமிழ் நாட்டில் ஒரு கோஷ்டி இருக்கிறது. இவர்களுடைய திருப்திக்காகவோ என்னமோ, இப்பொழுது 'தாய் நாடு' என்ற தமிழ் ஸ்டண்ட் படம் மாடர்ன் தியேட்டர்ஸில் தயார் செய்யப்பட்டு வருவதாய்த் தெரிகிறது. இந்த சரித்திர ஸ்டண்ட் படத்தை விருத்தி டிப்பவர்கள் சிவாஜி பிக்சர்ஸார் என்பவர்கள். இதில் P. U. சின்னப்பா, K. K. பெருமாள், M. A. ராஜாமணி

P. R. மங்களம் முதலியோர் நடிப்பார்களாம்.

* * *

மலையாள பாஷையில் அதிகமாகப் படங்களே வெளிவரவில்லை. இக்குறையை நிவர்த்திக்க மலையாளிகளே முன்னுக்கு வராவிட்டாலும், தமிழர்களாவது வந்தது பாராட்டத் தக்கதே. முன்பு சேலம் மாடர்ன் தியேட்டர் ஸார் 'பாலன்' என்ற படத்தைப் பிடித்தனர். அதைப் பின்பற்றி இப்பொழுது ஸ்யாமளா பிக்சர் ஸாரும் 'ஞானம்பிகை' என்ற மலையாளப் படத்தை வெற்றியுடன் எடுத்திருக்கின்றனர். இப்படம் விரைவில் சென்னையில் திரையிடப்படலாம்.

* * *

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் எடுக்கப்பட்டு வரும் 'விக்கிரம ஊர்வசி' என்ற படத்தில் காளி. என். ரத்னம் நடிக்கும் பாகத்தை டைரெக்டர் வி. வி. ராமன் எடுத்து முடித்துவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

* * *

சொற்பகாலத்திற்கு முன்புதான் ஆரம்பிக்கப்பட்ட 'பால நாகம்மா' என்ற தெலுங்குப் படத்தின் உரிமையை வாங்குவதற்கு சிலர் நான் முந்தி, நீ முந்தி என்று

ஸ்யாமளாவின் "ஞானம்பிகையில்" ஓர் காட்சி.

வருவதைக் கண்டா
எடுத்து முடிந்
எண்ணவேண்டி ய
படம் அக்டோபர் மு
திரையிடப்படுமாம்.

* *

முன்னமொரு நாதஸ்வர
தமிழ்ப் படத்தில் புகுந்து நடி
பாடி நல்ல பெயர் எடுத்தார். அ
போலவே இப்பொழுது திருவெண்காடு சுப்ரமணியமும் தமிழ்ப்பட உலகில் காலைவைத்திருக்கிறார். இவர் முதன் முதலில் நடிக்கும் படம் "கிருஷ்ண சைதன்யா" என்பதாம். இது வெற்றி பெறட்டுமென்பதே என் அவா. எவ்வளவோ பேர் அனேகம் படங்களில் நடித்த பின் முதலாளியாகின்றனர். ஆனால், திரு. சுப்ரமணியம் எடுத்த எடுப்பிலேயே நடிகராகவும் பட முதலாளியாயும் ஆய்விட்டாரென்று தெரிகிறது.

நடிகர் தேர்தல்

நம் தமிழ் நாட்டில் படப் பிடிப்பிற்கு நடிகர்களைத் தேர்ந்தெடுப்பது மிக்க மோசமான நிலைமையிலிருப்பது வருந்தத்தக்க விஷயம். நம் பட முத

...ளுக்கு அந்தந்த ... முக வெட்டு, ...தம் இருக்கிறதோ ...அவர்கள் பேசும் ...கீர்த்தி பெற்றிருந்தால் ...த்திற்கு அமர்த்தி விடு

...த சி நாடுகளில் ...த்திற்கு நடிகர்களைப் ...பொருக்க வேண்டுமென் றால் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வார்கள். உடனே ஆயிரக்கணக் கான ஆடவர்களும், பெண்டிர்களும் ஸ்டுடி யோவுக்கு வருவார்கள், வந்தவர்களில் நல்ல முக வெட்டு, உயரம், தேக நிறை முதலியவைகளைப் பார்த்து அமர்த்துவார் கள்.

இங்கு படமுதலாளி கள் தங்களுக்கு வேண் டிய நடிகர்களா யிருந் தால் உடனே படத்திற்கு பொருத்த மிருக்கிறதோ இல்லையோ அவர்களை அமர்த்துகின்றனர். நடி கர்களைத் தேர்ந் தெடுக் கும் சமயம் அவர்களது சாரீரம் 'மைக்' கருவிக்கு ஒத்திருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டும்; நம்மவர்கள் அதையும் சரிவர கவனிப்பதில்லை. சில நடிகர்களது சாரீரம் 'மைக்' கருவிக்கு சரியாக அமைவது கிடையாது.

சில தமிழ் படமுத லாளிகள் நடிகர்களை வைத்துக் கொண்டு கதைகள் எழுதுகிறார்கள். ஏனெனில் நடிகர் களுக்குக் கதைபூராவும் முக்கிய பாகங் கள் கொடுக்கப்பட வேண்டுமென்பது முதலாளிகள் எண்ணம். நல்ல கதை களை வைத்துக் கொண்டுதான் நடிகர் களைப் பொருக்க வேண்டும். சிற்சில முதலாளிகள் நல்ல முக வெட்டு உள்ள வர்களை அமர்த்தினால் அவர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்க வேண்டு மென்றெண்ணி, சொற்ப தொகை யில் அழகில்லாதவர்களையும், படத் திற்குத் தக்க முக வெட்டில்லாதவர் களையும், கதைக்குத் தக்க பொருத்த மில்லாதவர்களையும், ஒப்பந்தம் செய்து

மிஸ். ஏ. ஆர். சகுந்தலா

இவர் சந்திரகுப்த சாணக்யாவிலும் இன் னும் பல படங்களிலும் நடனமாதாக நடித் துள்ளார். தற்சமயம் கோவை ஜுவெல் பிக்சர்ஸாரின் 'மித்திர முராரி'யில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

விடுகிறார்கள்; மேலே கூறிய சம்பவம் சமீபத்தில் ஒரு தமிழ் படத்திற்காகப் பாத்திரங்களைத் தேர்ந் தெடுக்கும் பொழுது நேர்ந்தது.

அந்நியப் படங்களில் நடிக்கும் நடிக நடிகைகள் ஒவ்வொருவரும் தேக அமைப்பில் எவ்வளவு திடசாலியாய் இருக்கிறார்கள்! அங்கு அவர்கள் தங்கள் படத்திற்குப் பாத்திரங்களை அமர்த்தும் பொழுது சரீர அமைப்பிலும் கவனம் செலுத்துகிறார்கள். இங்கு நம்மவர்கள் நடிகர்களில் தேர்தலில்தான் கவனம் செலுத்துவது கிடையாது, நடிகர்களின் தேக அமைப்பிலாவது தங்கள் கண்களைச் செலுத்தலாகாதா?

பிரபாத் கம்பெனி 'ஸாந்த துகாராம்' படத்தை நோக்குங்கால், அதில் துகாராமாக நடித்த விஷ்ணுபந்த் பாக்னிஸ் அப்பாகத்திற்கு எவ்வளவு பொருத்தமாக இருந்தார்! அதே படத்தில் சிவாஜியாக நடித்த நங்ரேகர் சிவாஜி போலவே இருந்தார். அப்படத்தில் உண்மையாகவே துகாராமும், சிவாஜியும் உயிர் பெற்று வந்து விட்டதாக எண்ணும்படி இருந்தது.

இக்கம்பெனியார் [illegible] படத்திற்கும் கதைக்[illegible] கர்களைத் தேர்ந் தெடுக[illegible] சமயம் பிரபாத் [illegible] 'ஸாந்த் ஞானேஷ்வர்' [illegible] நடிக்கும் சிறுவர்களின் [illegible] பாகத்தைப் பெரியவர்க[illegible] பதும் வேஷப் பொருத்தத்தில் [illegible] ளவு திறமையாக ஒத்திருக்கிறது! இ[illegible] படத்தில் நடிக்கும் பாலர்களே பெரியவர்களாகி நடிப்பது போலிருக்கிறது. இதனால் பிரபாத் நம் ஹிந்துஸ்தானத்தில் புகழ் பெற்று விளங்குகிறது.

நம் முதலாளிகள் எல்லா விஷயங்களிலும் பின் வாங்கி விட்டது விசனிக்கத்தக்கது. மேலே கூறியுள்ள சகல விஷயங்களையும் நம்மவர்கள் கொஞ்சம் ஆலோசனை செய்து பார்த்தால் உண்மை விளங்கும். இனிமேலாவது நமது தென்னாட்டுப் படத்தொழிலில் பற்றுள்ளவர்களும், பட முதலாளிகளும், கதையமைப்புக்குத் தக்கவாறு பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து நமது செந்தமிழ் நாட்டிற்குப் புகழ் மாலை கிடைக்குமாறு செய்வார்களென்று நம்புகிறேன். "சந்தர்"

Wanted 40 Candidates

To learn Homoeopathy. Six Months course. Excellent Postal tution. Books supplied free. M. B. Homoeo. Diplomas awarded. Fees Rs. 40/- for the whole course. Apply with four annas stamps for enrolment form to

The Ragland's Eastern Medical College,

THENI. S. I. R.



புத்தகப் பார்வை

அனுபோக சோப் செய்யும் முறை

எழுதியவர் :— T. N. மொஹிதீன் சாயபு, வடக்கு
ராஜ வீதி, தஞ்சாவூர். (விலை. ரூ. 1.)

நாட்டின் நாகரீகத்தையும், செல்வத்தையும் வளர்ப்பது கைத்தொழில் ஒன்று தான். கைத்தொழில் இல்லாத நாடு என்றும் பிறநாட்டை எதிர் பார்த்து, அதன் சாமான்களுக்குப் பணத்தைக் கொட்டி வறுமையில் மூழ்க வேண்டி வரும். இதனாலேயே நம் நாட்டில் எல்லாக் கைத்தொழிலையும் வளர்க்கவேண்டு மென்று காந்திஜி வற்புறுத்திவருகிறார்.

'அனுபோக சோப் செய்யும் முறை' என்ற புத்தகம் கைத்தொழில் வளர வேண்டும் என்ற எண்ணத்துடன் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் பலவித சோப்புகள் செய்வதற்கான முறைகள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. வேலையின்றிக் கஷ்டப்படுவோர் குறைந்த சிலவில் சோப் தொழிலைக் கற்றுப் பணம் சம்பாதிக்க இப் புத்தகம் உதவும். ஆனால் இதற்குள்ள 1. ரூ. விலை தான் மிக அதிகம் என்று கருதுகிறேன்.

சிற்பியின் கனவு

இதிலுள்ள போட்டோக்களை எடுத்தவர் :—வாணீசரண்.

இதன் விலை விபரம் தெரியவில்லை.

கிடைக்கு மிடம் :—ஞானசக்தி நிலையம், மைலாப்பூர், மதராஸ்.

இப்புத்தகத்தில் மஹாபலிபுரத்தின் சரித்திரம் வெகு இனிய அழகிய நடையில் விவரிக்கப் பட்டிருக்கிறது. சந்தர்ப்பத்திற் கேற்ற போட்டோக்களும் நிறைய இதில் இருக்கின்றன. மஹாபலிபுரத்தை நேரில் பார்க்காதவர்கள் இதைப் பார்த்தால், அந்த ஸ்தலத்தை நேரிலே கண்டு அனுபவித்தமாதிரி விஷயங்களைப் புரிந்துகொள்ளலாம்.

மனோன்மணி எண் சுவடி வாய்ப்பாடு

கிடைக்குமிடம் :—மனோன்மணி விலாச புத்தகசாலை,
விஜயபுரம், திருவாரூர் (விலை. 1. அ)

'எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்' என்பது பழமொழி. சிறுவர்கட்கு எழுத்தைப் போதிப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு எண்ணை போதிப்பதும் அவசியம். சிறுவர்முதல் பெரியவர் வரை யாவருக்கும் இப்புத்தகம் பயன்படும். முக்கியமாய் உபாத்தியாயர்கள் தங்கள் மாணவர்கட்கு இந்த எண்சுவடியைப் பயன்படுத்திக்கொள்வாராக.

பிலிம் இந்தியா

விலாசம் :—53. ஏழுகிணறு தெரு, மதராஸ். (

தமிழ் சினிமாக்கலையை முன்னுக்குக்கொண்டுவர எவ்வள
தோன்றி, பொருளாதார நெருக்கடியில் மறைந்து விட்டன.
'பிலிம் இந்தியா' என்றும செழிப்புடன் இருந்து தொண்டாற
நம்புகிறேன். இதன் முதன் இதழில் பல அரிய கட்டுரைகளும்,
செய்திகளும் படங்களும், இருக்கின்றன. எக்காரணத்தாலோ அச்சுப்
கள் அதிகம் ஏற்பட்டதாய்த் தெரிகிறது. அடுத்த இதழ் சிறப்பாய் வெ
லாம் என எதிர்பார்க்கலாம். இதன் ஆசிரியர் E. B. S. மணி.

டிவைன் லைப்

விலாசம் :—ஆனந்த குடீர் போஸ்ட், ரிஷிகேஷ்.

இப்பத்திரிகையின் வருஷாந்தர அனுபந்தம் வரப்பெற்றோம்; ஸ்வாமி சிவானந்தாவைத் தலைவராய்க்கொண்ட இவ்வாங்கிலப்பத்திரிகையில் பல அரிய வேதாந்தவிஷயங்கள் இருப்பதோடு, இந்தச் சங்கத்தின் வருஷாந்தர அறிக்கையும், அனேக ஆர்ட் போட்டோக்களும் நிறைந்திருக்கின்றன.

லோகோபகாரி (பாரதி மலர்)

17. A. கோடவுன் தெரு, ஜி. டி. மதராஸ்.

ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியாரை அறியாத தமிழர் இப்பொழுது யாரும் இருக்க முடியாது. அவர் ஒரு தெய்வீகக்கவி. எதுகை, மோனை, யாப்பு, அணி முதலிய கட்டுக்கோப்புகளை வைத்துக் கொண்டு கவி கட்டும் புலவர் அல்ல அவர்.

உள்ளத்தில் எழும் உணர்ச்சி வெள்ளத்தை எளிய இனிய தமிழ் நடையில், வீரமும், பொருளும், வேகமும் கொண்ட கவிகளாய் நினைத்த மாத்திரத்தில் அள்ளிவீசும் இயற்கைக் கவியாய் இருந்தார் அவர். அவர் தம் கவிகளால் தமிழர்களைத் தட்டி எழுப்பி தேசப் பற்றை ஊட்டினர்.

இத்தகைய கவியின் தினத்தைக் கொண்டாடும் அறிகுறியாய் லோகோபகாரி 'மலர்' வெளிவந்திருப்பது பாராட்டற்குறியது. பாரதியாரைப் பற்றிய பல அரிய கட்டுரைகளைப் பல அறிஞர்கள் இதில் எழுதியிருக்கின்றனர். குறைந்த விலையான 2—அணாவுக்கு நிறைந்த பக்கங்கள் கொண்ட இம்மலரை யாவரும் வாங்குவது நலம்.

நவபாரதி

2, பந்தர் தெரு, மதராஸ். (விலை. 2. அ)

ஒருவருக்கு வேலையில்லாவிட்டாலோ, தன் பெயரை ஆசிரியர் என்று போட்டுக்கொள்ள இஷ்டப்பட்டாலோ உடனே ஒரு பத்திரிகை ஆரம்பித்து விடுவது தமிழ் நாட்டில் சகஜமாய்ப் போய்விட்டது. இதனுல் நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் உதயமான மறுதினமே அஸ்தமனமும் ஆய்விட்டன.

...பொழுது வெளிவந்துள்ள நவபாரதி இந்த கோஷ்டியில் ...று நிச்சயம் சொல்லலாம். சில பத்திரிகைகளைப் போலின்றி ...லயே நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் பாடுபட்டு லக்ஷியப் ...இருக்கும் என்பது என் நம்பிக்கை.

...முதல் இதழில் பல அரிய கட்டுரை கதைகள், சினிமா விஷயங் ...ல் விஷயங்கள் முதலியன நிறைந்திருக்கின்றன. நவபாரதி எல் ...புடனும் நாட்டிற்கு உண்மைத் தொண்டாற்று மென்று கருது ...ன்.

கிராம சேவை

6. மடத்துத்தெரு, காஞ்சிபுரம். (விலை அணு 0—1—3)

கிராமத்தொண்டு செய்யவேண்டு மென்று தேசீயத் தலைவர்கள் சொல்லி வருகின்றனர். கிராமவாசிகள் சுகப்பட்டால் தான் தேசமும் சுபிட்சமுறும். கிராமசேவைக் கென்று நம் நாட்டில் அதிகமாகப் பத்திரிகைகளே கிடையாது. தற்சமயம் அந்தக் குறையை ஓரளவு நீக்க 'கிராம சேவை' புறப்பட்டிருக்கிறது. அதன் சேவை கிராமங்களுக்குப் பயன்படுமாக.

—"நாதன்"

இஷ்டப்படி இல்லற சுகத்தை அடையலாம்.

இல்லற சுகத்தை விரும்பாதவர்கள் ஒருவருமிருக்கமாட்டார்கள். இல்லற சுகம் இல்லையேல் உலக வாழ்க்கை பயன்படாது.

சி. எம். சாமி

மன்மதக் குளிகை

உபயோகியுங்கள்!

நரம்புத் தளர்ச்சி, தாது நஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்பு வலி, அசதி, நீங்கும். வீரியவிருத்தி, ஞாபகசக்தி, போக சக்தி, இந்திரியக்கட்டு முதலியன உண்டாகும். இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

20-குளிகை விலை ரூ. 2. 60-குளிகை விலை ரூ. 5. தபால் சார்ஜ் வேறு:

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S. I.

பிராஞ்சு :—

1-54, அருணாசல நாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

தரும பூமி

எஸ். ஏ. மருதையன்

அத்தியாயம் 22

சம்மதித்தார்

“உன்னைப்போலே உள்ளவாளை யெல்லாம் கண்டால் எனக்குப் பிடிக்கிறதேயில்லை. அதிலும் நீ பாவி கூட......!” என ஆரம்பித்தார் வாத்தியார்.

இவ்வளவு நேரமாய்த் தர்க்கித்த ராமலிங்கம்பிள்ளை ஏனோ பயப்பட்டார். அவரை யறியாத ஒரு பயம் சூழ “பாவியா? எப்படி?” என்று சிரித்த வண்ணம் கேட்டார்.

“பாவிதான்! இன்றைக் கெல்லாம் பார்வதி பரதேசிக் கோலம்னு தகும். சாப்பாட்டுக்கே அடிதடி! வேலைக்குன்னு போன கணபதியைப் பாம்பு கடிக்க, செத்தானு பிழைத்தானுன்னு கூடத் தெரியாமல் கலங்கிண்டிருக்கா! நீயென்னடான்னு! நாழிகழியாத உடை, வேளைதவறாத உணவு; ரோல்ஸ்ராய்ஸ் கார் சவாரி; புனிதமில்லாத ஒரு பெண்ணோடு கேளிக்கை கெக்கலிப்பு!”

“இதிலே நான் பாவியா? ‘மனிமேக்ஸ் மெனிதிங்ஸ்’ ஸார்! அதைப் பாதுகாக்கல்லேன்னு இது மாத்திரமா? என் மாமா ஒரு சுத்தப் பட்டிக்காடு ஸார்! அவர் சமாச்சாரம்னு எனக்கு எரிச்சலாய்த் தானிருக்கு! அவர் பண்ணுகிறது இவ்வளவும்!”

“அதிலே, மனசுதான் காரணம்! எதற்கும் நல்ல மனசு வேணும்! இதிலேயும் நிரந்தரமானதுன்னு ஒன்றிருந்தால் அதற்கு உயிரையும் கொடுக்கணும். இதைப்பற்றி எவ்வளவு சொன்னாலும் உனக்கு வருது. இப்போ, கஷ்டப்படற அவருக்கு ஒரு ஏற்பாடு செய்!”

ராமலிங்கம்பிள்ளை “ஆகட்டும்; நீங்களும்கூட வாங்க” என்றார்.

“நான்தானே அவாளுக்குச் சொல்லிண்டு வந்தவன்!”

இதற்குப் பிறகு இரண்டொரு தினங்களில் ராமலிங்கம் பிள்ளையும் பாட்டு வாத்தியாரும் நல்லனூர்வந்து சேரலானார்கள்.

பாட்டு வாத்தியார் லோகநாயகம் பிள்ளையைச் சந்தித்து கணபதியைப் பற்றி விசாரித்ததில் கணபதி வேலையிலிருப்பதாகச் செய்தி கிடைத்தது! அதன் விபரமனைத்தும் தர்மலிங்கம் பிள்ளையிடம் தெரிவித்து ராமலிங்கம் பிள்ளை செய்யும் உதவியை ஏற்றுக் கொள்ள வேண்டினார். அதாவது பார்வதிக்கு இயற்கையான சங்கீதத் திறமையிருப்பதால் இசைத்தட்டு உலகில் அவளுக்கு நல்ல செல்வாக்கு ஏற்படும். குடும்பம் இருக்கிற நிலைமைக்கு அதனாலே நல்ல வரும்படி கிடைக்கும். எனவே பார்வதியை சென்னைக்கு அழைத்துப் போவது, தர்மலிங்கம் பிள்ளைக்கு கடன் தொல்லை அதிகமாயிருப்பதால், வீடு, தோட்டம், காடு, இவைகளைக்

...டைத்துவிட்டு கோவை ரங்கவிலாஸ் பங்களாவில் குடியிருப்பது. குடும்பச் சிலவுக்கு வேண்டியதை ராமலிங்கம் பிள்ளை கொடுப்பதாகப் பேச்சு ஒப்பந்தம்! இப்படிச் செய்த பிறகு தர்மலிங்கம் பிள்ளை திருச்சி சென்று கணபதியிடம் விஷயத்தைச் சொல்லி அவன் அபிப்ராயத்தைக் கேட்பது. வேண்டுமென்றால் வேலையைவிட்டு பார்வதியுடன் இருக்கப் பிரியப்பட்டால் அதன்படி செய்வது. இல்லையேல் சௌகரியம் வரும்வரை, தாயாரைத் துணைக்கு அனுப்பி வைப்பது. எப்படியும் பார்வதி பிளேட்டில் பாடினால் அதனால் குடும்பம் சுகப்படும் என்பதே அய்யரின் எண்ணம். ஆனால் ராமலிங்கம் பிள்ளை கொண்டிருந்த எண்ணம் வேறு!

இந்த ஏற்பாட்டுக்கு தர்மலிங்கம் பிள்ளை ஒத்துக் கொண்டார். பாட்டு வாத்தியாரிஷ்டத்திற்குத் தடைசொல்லப் பார்வதியால் முடியாவிட்டாலும் தன் தந்தையிடம் உதவிபெறவோ, சட்டைக்காரியை இழுத்துக் கொண்டு திரியும் அவரிடம் ஆதரிப்புப் பெறவோ அவளுக்கு இஷ்டமில்லை. ஆயினும் மாமா பிடிவாதத்தாலும், பாட்டுவாத்தியார் தன் மீது கொண்டிருக்கும் அக்கரையாலும் ஒத்துக் கொண்டாள்.

அன்னபூரணிக்கும் சம்பந்தியார் ராமலிங்கம் பிள்ளையிடம் உதவி பெறுவது பிடிக்கவில்லை. தனியாகப் பார்வதிக்கும் அன்னபூரணிக்கும் தர்மலிங்கம் பிள்ளை எவ்வளவோ சமாதானங்கள் செய்தார். இதன்னியில் கணவனிஷ்டத்தைக் கேட்காமல் பிளேட்டில் கொடுக்கிற தெப்படி, என சந்தேகித்த பார்வதிக்கு தர்மலிங்கம் பிள்ளை "தம்பி அப்படி ஒன்றும் கோபிக்கமாட்டான்." என்று சமாதானம் சொன்னார்.

கணபதியைப் பார்த்து இரண்டு மாசமாயிற்று. எனவே போகும் வழியில் கணவனைப் பார்க்க வேண்டும் என்று பார்வதி வேண்டிக் கொள்ள அப்படியே செய்வதென எல்லோரும் கோவை வரப் புறப்பட்டார்கள்.

பார்வதியையும் அவளிஷ்டப்படி சிறுமியையும் சென்னைக்கு அனுப்பி விட்டு தான் அன்னபூரணியைக் கோவையில் இருத்திவிட்டு திருச்சிக்குப் போகலானார் தருமலிங்கம் பிள்ளை.

அத்தியாயம் 23

பேராச்சரியம்!

கணபதியை ஏற்றிச் சென்ற கார், பதினாறும் அத்தியாயத்திற் கூறிய இடத்திலிருந்து புறப்பட்டு சுமார் பதினொரு மணிக்கு நீலகிரிமலையடியைச் சேர்ந்து மெள்ள மெள்ள மேலே ஏறிற்று. மலைப் பிரதேசங்களில் காரோட்டியறியாத 'டிரைவர்' மெதுவாகக் காரைச் செலுத்திக் கொண்டிருந்தான்-கணபதியின் உடல் நிலையில் யாதொரு மாறுதலும் இல்லை!

நேரம் ஆக ஆக கார் மேலே மேலே வளைந்து வளைந்து போய்க் கொண்டிருந்தது. சுமார் ஒரு மணிக்குப் பிறகு மலையின் ஒரு சிகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. சிறிது சிறிதாகக் குளிர் தாங்க ஆரம்பித்தது. காரிலுள்ளவர்கள் உடம்புக்குப் போர்த்துக் கொண்டார்கள். அடிக்கடி அவர்கள் முகம் கவலைக் குறியைக் காட்டிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு கணபதியின் உடல் தெளிவு கொள்வதுபோல் தெரிந்தது—ஒரே ஆச்சரியம்! அடுத்தாற்போல் கணபதி புரண்டு படுத்தான். 'சீட்டி'லிருந்த கால்கள்

தொங்கியாடின. கைகள் உடுத்திருந்த ஆடையைப் போர்த்துக் கொள்ள இழுத்தன. கண்கள் திறந்து மூடின. முதலிலிருந்து நடந்த சம்பவங்கள் அவன் மனக்கண் முன் வந்துபோயின. "ஆ! பாம்பு!!" என்று கத்தினான்; உணர்ச்சி வேகத்தால் குரல் அடங்கிற்று. அதற்கு அறிகுறியாய் உதடுகள் மாத்திரம் துடிதுடித்தன!

எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். "காரை நிறுத்து!" என்றார் பிள்ளை.

கார் சட்டென்று நின்றது!

"உடம்பு குளிர்றது!" என்றான் கணபதி.

"இன்னம் கொஞ்சம் பொறு; போர்த்துக் கொள்ளலாம்" என்று சமாதானம் செய்தார் பிள்ளை. மேற்கொண்டு அன்றைய இரவு முழுவதும் குளிரிலேயே தங்க வைத்தார்கள்.

கணபதி உயிர் பிழைத்தது ஆச்சரியம். ஆச்சரியத்திலும் பேராச்சரியம்!

கணபதியின் உடலில் இன்னும் விஷம் தங்கியிருப்பதாகவும், நாளடைவில் உடம்பில் மட்டற்ற உஷ்ண மேற்படும்போது கெடுதியை விளைவிக்குமென்று, கணபதியைச் சென்னைக்கு அழைத்துவந்து பதினைந்து நாள்வரை சொந்த டாக்டரைக் கொண்டு சொஸ்தப் படுத்தி திருச்சிக்கு அனுப்பி வைத்தார் பிள்ளை.

அப்பொழுதெல்லாம் அவன் தாய் தந்தையருக்கு மூன்று கடிதங்கள் எழுதி ஒவ்வொரு கடிதத்திற்கும் பதில் கொடுக்கா திருந்ததுபற்றி மன வருத்தப்பட்டான். நேரில் போய்ப் பார்த்துவர யோசித்தான். ஆனால் வேலைதவர்ந்துவிடும் என்ற நோக்கத்தில் திருச்சி வந்து கோபாலைப் பார்த்தான். "ஹலோ மிஸ்டர் கணபதி! வா, வா, வா! நல்ல [illegible] வந்து சேர்ந்தாயே! நாளைக்கெல்லாம் 'மெட்ராஸ்' போயிடுவேன் குடும்பத்தோடு" என்று வரவேற்றான் கோபால்.

"ஏன் என்ன சங்கதி? மெட்ராவிலே 'பிஸினஸ்' காரணமாகவோ?"

"எஸ்! 'தர்மபாரதி'க்கு சப் எடிட்டராய்ப் போகப் போறேன்! ஹூம் உன் அப்பா வந்துவிட்டுப் போனாரே! நீ என் ஒரு லெட்டர்கூடப் போடல்லே?"

"ஒரு லெட்டரா? 'த்ரீ லெட்டர்ஸ்' ஆச்சு! ஒன்றுக்கும் ரிப்ளை யில்லை!"

"என்ன ஆச்சரியமாயிருக்கே?"

"ஆச்சரியமென்ன கோபால்! என் அப்பா ஒரு சுத்தக் கட்டுப் பெட்டி! அதிலும் குடும்பக்கவலை கொஞ்சங் கூட இருக்காது. என்னமோ லெட்டர் வந்தது. என்னமோ செய்யறான்னு ஒரு மூலையிலே வீசிப்போட்டு விட்டு சேரிப்பக்கம் போய்விடுவார்!"

"சே சே! அப்படி உன் அப்பா மேலே வருத்தப்படாதே கணபதி! எனக்குத் தெரிந்தமட்டில் உன் அப்பா ஒரு அறிவாளி. அதிருக்கட்டும் இப்போ உனக்கு வேறே மில்லில் 'அக்கௌண்டெண்ட்' வேலை எனக்குத் தெரிந்த வைத்தீஸ்வரமய்யரைக் கொண்டு முடிச்சிருக்கேன்! அவர் வீட்டுக்குப் பக்கத்திலேயே தங்கியிருக்க ஒரு வீடு காலி; அதுவும் அவர் வீடே தான்!"

"ரொம்ப சந்தோஷம்! இப்போ நீ போனால் பார்க்கிறது எப்போ?"

"பாக்கிறேன்; மெட்ராஸ் போன பின்னே லெட்டர் போடறேன்; இப்போ உடம்பு நன்னா, நானே இருக்கு!"

... பதினைந்து தினமாய் மருந்து சாப்பிட்டேன்; நல்ல தனமாய்த்தானிருக்கு''

''ஆனால் வா; எல்லாம் முடிச்சுக் கொள்ளலாம்''

இதன் பிறகு கோபால், வைத்தீஸ்வரமய்யரைக் கண்டு கணபதியை அறிமுகப் படுத்தி நிரந்தரமான நிலையை ஏற்படுத்திவிட்டு மறுநாள் கணபதியை அவனது தாய் தந்தையருக்கு கடிதம் மெழுதும்படி சொல்லிவிட்டு சென்னைக்குக் குடும்பத்தோடு புறப்பட்டுப் போனான். எனவே தாய் தந்தையர்களுக்கு மனவருத்தத்தோடு ஒரு கடித மெழுதிவிட்டு பதிலை எதிர் பார்த்திருந்தான். பேச்சுத் துணைக்கு ஆளில்லாது போகவே கணபதி தனிமையி லிருக்கும்போது சிந்தனையில் இறங்கிவிடுவான். வைத்தீஸ்வரமய்யரின் கண்யமற்ற வாழ்க்கையும், 'மில் ஒனார்'யிருந்து ஏழைகளைப் படாதபாடு படுத்துவதும், தொழிலாளிகளுக்கென ஒரு 'ஸ்டோர்' வேறே ஏற்படுத்தி ஏழைகள் தலையில் சாம்பலடிப்பதும் அவனை வெகுவாக உறுத்தி வந்தது. கண்ணிய வாழ்வின் அலங்கோலமும், கபட வாழ்வின் அலங்காரமும், அவனது மனதைப் பாதிக்கலாயிற்று.

அத்தியாயம் 24

அடுத்த வீட்டில்

கணபதி நாலைந்து தினங்களாக தாய் தந்தையரிடமிருந்து பதில் கிடைக்காமற் போகவே எரிச்சலோடு மற்றொரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். அப்போது நண்பன் கிட்டு வந்து ''ஓ! மறுபடியும் 'லெட்டரா'? உனக்கு இதுதானே வேலை?'' என்று கேலி செய்தான்.

''என்ன கிட்டு பண்ணறது? எனக்கு ஒவ்வொரு நிமிஷமும் இதே கவலையா யிருக்கு!''

''அட நீ என்ன கணபதி, பிரமாத கவலைப்படறே! 'பைவ் லெட்டர்ஸ்' ஸுக்கும் பதில் கொடுக்கல்லேன்னே! அவர்கள் உன்னைவேணும்னு பாக்கிறதாய்த் தெரியலையே! அப்படி நீ வேணும்னா இத்தனைக்கும் கதறிக் கொண்டு வந்திருப்பாங்களே! அதிருக்கட்டும்! ஐயர் வீட்டிலே ஒரு பியூட்டி எப்படி?''

''பியூட்டியா! என்ன பியூட்டி?''

''அய்யர் மகள் வேதவதிதான்!''

''ஓ ஹோ! பாவம்! அந்தப் பெண்ணுக்கு வந்த கதி பாரு கிட்டு!''

''பாவமா? கதியா? நீ ஒரு பைத்தியம்? என்ன பாவம் என்ன கதி?''

''இல்லை.........! இந்த இள வயசிலே விதவை யாச்சேன்னுதான்!''

''அவள் விதவை மாதிரியா இருக்கறா? அசல் அந்த வழியிலே கைதேர்ந்தவள் மாதிரியில்லை? அவள் 'நீட்னெஸ்' ஸும்! காலுக்கு ஸ்லிப்பரும்! அந்தக் கோணவகிடும், அந்தக் குலுக்கு நடையும் ஒரு விதவை மாதிரியா தோணறது?''

''சே சே! பெரிய இடத்துப் பெண் அப்படியெல்லாம் நடக்காது. என்னமோ படித்த பெண்! மூடப்பழக்க வழக்கம் பிடிக்காதிருக்கலாம். அதனாலேயே தப்பாய் நினைத்துவிடலாமா?''

''ஆனால் நீயும் ஒரு படித்த பெண்ணைக் கட்டிண்டவன்! ஜாக்கிரதையாயிருந்துக்கோ!''

"என்க்கு அப்படிப்பட்ட ஆடம் பரத்திலே யெல்லாம் ஆசைகிடையாது கிட்டு!"

"என்னமோடா அப்பா! ஆனாப் பட்ட பிரமச்சாரிகளெல்லாம் வேதத்தைக் கண்டால் திகைச்சுப் போறா! இனி நீ தானா? நானும் பார்க்கத்தானே போறேன்! அதிருக்கட்டும்; நான் வறேன்!"

இதன் பிறகு கிட்டுவின் போதனை கணபதியைச் சிந்திக்க வைத்தது. கடிதமெழுதவும் மனமில்லாமல் பலத்த சிந்தனையில் மூழ்கினான்.

அடுத்தாற்போல் ஐந்தாறு கடிதங்களுக்கும் பதில் வாராதது பற்றி "என் அப்பாவுக் கென்ன கல்மனசு! ஒரு கடிதம், இரண்டு கடிதம், மூன்று கடிதம்! ஆறு கடிதங்களுக்கும் தபால் போடவில்லைன்னா என்ன ஒரு அலட்சியம்! இருக்கட்டும் எல்லாருக்கும்— சேர்ந்தாற்போல் ஒரு ரிஜிஸ்டர் லெட்டர் அனுப்பிவிட்டுச் சொல்றேன்" என்று சொன்ன வண்ணம் கடிதம் எழுத ஆரம்பித்தான்.

அடுத்த கணத்தில் குயிலினுமினிய குரலில் அடுத்த வீட்டில் யாரோ பாடுவது கேட்டு நி... தான். அக்குரலில் கவர்ச்சி; உள்ளமுருக்கும் சந்தம்; ஒரு கணம் அந்தப் பாட்டு; மறுகணம் ஒரு காதற் பாட்டு; கணபதி இருக்கை கொள்ளாமல் வெளியே வந்தான்.

ஒரு அடி இடை வெளிவிட்டு அடுத்த ஒரு பங்களா; வைத்தீஸ்வர மய்யருடையது. இந்த வீட்டிலிருந்து பார்த்தால் பங்களா ஹாலில் நடப்பது அனைத்தும் தெரியும்படி இரண்டொரு ஜன்னல்கள்! 'ஹாலில்' இருந்த ஊஞ்சலில் சுமார் பதினெட்டு வயதுள்ள ஒரு இளமங்கை பாடியாடிக் குதூகலமாயிருந்தாள். அவள் ஒவ்வொரு செய்கையிலும் யௌவனத்தின் சோபை தெரிந்தது. அவளது ஆட்ட பாட்டத்திற்கு அளவேயில்லை!

வெளியே வந்த கணபதி மலைத்து நின்றான். இரண்டொரு தடவை வேதவதியைப் பார்த்திருந்த கணபதி அப்போதைய நிலையில் திகைக்கலாயிற்று. அப்போதே வேதவதி சாஹஸமாக கணபதியைப் பார்க்காதவளைப் போல் நடித்துக் கொண்டு ஊஞ்சலில் ஆடியிருந்தாள்; கணபதி அதிசயித்தான். (தொடரும்)

இனாம் இனாம்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி அனுக்கிரஹத்தால்

"ஆருடத்தின் மகிமை"

உங்கள் எதிர்காலத்தைப் பற்றி 7 கேள்விகள் எழுதி, தபால், விளம்பர சிலவிற்குமாக 5 ஒரு அணா தபால் ஸ்டாம்புகளாக வாங்கி அனுப்பினால், இனாமாக உங்கள் எதிர்கால செய்தி உங்களை விரைவில் தேடிவந்தடையும்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜோதிஷ ஆபீஸ்,
கோட்டமருதூர்,
அரகண்டநல்லூர், P. O. (S. A. Dt.)

கலையெழுச்சி

(ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார்)

காரிருட் கூந்தலினல்—மஹா
காளியிவ் வுலகினைக் கவர்ந்து நின்ருள்;
தாரகைத் திருமணிகள்—எங்கும்
தணல்பெறு மலரெனத் தளுக்கு நிசி,
வாரிசம் உறங்கு நிசி—அல்லி
வனப்புற மணவிருந் தளிக்கு நிசி.
பாரெலாம் அடங்கிய பின்—மௌனப்
பரவச வெளியினைப் பார்த்தி ருந்தேன்.

விண்சுடர்ப் பவனியிலே—அதில்
விளைந்திடும் ஓமிசை வீணையிலே
தண்கடல் முரசினிலே—என்னைத்
தழுவித் தழுவிக்கொஞ்சும் தென்றலிலே,
எண்ணத்தை இழந்திருந்தேன்—என்
இதயத்தைத் திறந்தொரு மதிமுகத்தாள்
கண்மனங் கவர்ந்து நின்ருள்—அவள்
கனவினில் என்னுயிர் கலந்து நின்றேன்.

செஞ்சுடர் மேனியினள்—என்
சித்தத்திற் குடிகொண்ட சக்தி யிவள்.
அஞ்சன மையிருளை—ஓர்
அமுதுகு நகையினல் அழித்துவிட்டாள்.
கஞ்ச மலர் விழியால்—ஞானக்
கதிர்களைப் பொழிந்தனள் மதியினிலே
நெஞ்சினில் நினைத்த தெல்லாம்—வெகு
நேயமோ டுரைத்தனள் சேயெனக்கே.

கலையெனும் பெயருடையாள்—உள்ளம்
கனிந்தெழும் அழகெனும் வடிவுடையாள்
மலையெழும் அருவியைப் போல்—அன்பர்
மனத்தினிற் கவிதரும் வாணியிவள்

உலகிவள் சிற்பமடா—மாந்தர்
உயிர்க்கிவள் புன்னகை யின்பமடா
நிலையிலாக் காலரதம்—இந்த
நேரிழை செலுத்தமுன் னேறு தடா.

கல்வினுக் குயிர் தருவாள்—கவிக்
கனவினுக் கினியசொல் வளமளிப்பாள்.
தொல்புவிக் காட்சி யெல்லாம்—ஒரு
தூரிகை முனையிலே துலக்கிடுவாள்.
நல்லிசை விருந்தளிப்பாள்—இவள்
நாடக மேடையிஞ் ஞாலமெல்லாம்.
எல்லையில்லா வழகி—இவள்
எழுந்ததும் இரவியும் எழுந்ததுவே.

குழந்தைகளுக்கு

சிசுகல்பா

கட்டிமருந்து லீவர் & ஸ்ப்ளீன்,

ஈரல், குலைக்கட்டி

மற்ற, அஜீர்ண சம்பந்தமான சகல வியாதிகளைப் போக்கும்.
ஆச்சர்ய சக்தி யுள்ளது.

எங்கள் சிசுகல்பாவில் சேர்க்கப்பட்ட மருந்துகளின் பாகத்தை யாவரும் பகிரங்கமாகத் தெரிந்துகொள்ளக்கூடிய விவரத்துடன், தாமாகவே அநேகர் அனுப்பியிருக்கும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களின் காப்பிகளும் கேழ்ப்பவர்களுக்குத் தபாலில் அனுப்பப்படும்.

விவரங்களுக்கு :
தி கௌதமா பார்மசியூடிகல் & ரீஸர்ச் இன்ஸ்டிட்யூட் லிமிடெட்.
பெஜவாடா. M. S. M. Rly.

வசந்தம்

"அன்பன்"

"வசந்தை செய்ததைப் பார்த்தாயா? நான் எவ்வளவு நேரமாகப் பசித்திருந்தேன். அவள், நீ இல்லையானால் ஏன் என்று கூடக் கேட்கப் போவதில்லை. நான் இன்னு அவளுக்குக் கசப்பாகவே இருக்கிறது. அவள் செய்கிற தெல்லாம் உன்னிடத்திலே சொன்னால், உனக்கு வருத்தம் ஏற்படுமே என்று தான் முழுவதும் சொல்கிறதில்லை." என்று பிராட்டி மெல்லத் தன் புதல்வன் நடேசனிடத்தில் கூறினாள். இதைக் கேட்டுக் கொண்டிருந்தாள் நடேசனுடைய மனைவி வசந்தம்.

நடேசன் :—வசந்தா, அம்மா என்னெல்லாமோ சொல்கிறாளே, உன்னிடத்திலே எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டாயல்லவா?

வசந்தை :—நான் என்ன செய்ய வேண்டும்? உங்கள் அம்மைக்கு நான் எவ்வளவு அன்பாய் நடந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவு அன்பாகவே நடந்து கொள்கிறேன். இருந்தாலும் என்னைக் கொண்டு புகார் தான் சொல்கிறாள். இதற்கு மேல் நான் என்ன தான் செய்ய வேண்டும்? அவள் பசித்திருந்தால், எனக்கு எப்படித் தெரியும்? அதை வாய் விட்டுச் சொன்னாலல்லவோ தெரியும்?

நடேசன் :—ஆமாண்டி, ஆமாம். உனக்குத் தெரியாது இல்லையா?" என்று சொல்லிவிட்டு நடேசன் ஒரே குதியாய்க் குதித்து வசந்தையின் கன்னத்தில் ஒரு அறை அறைந்தான். இதற்கிடையே, "ஆமாம் அப்படித்தான் வேண்டும்; எல்லாத்துக்கும் 'நான் தான் பெரியவள்' என்று சொல்லிக் கொள்ளுகிறது இப்போ தெரிந்ததா? எல்லாம் பட்டால் தான் தெரியும்" என்றாள் பிராட்டி.

வசந்தை கண்ணீர் சொறிந்தாள். நடேசன் எடுத்ததற்கெல்லாம் தாய் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு மனைவியைத் துன்புறுத்துவது இயல்பாய் விட்டது. 'தாய்க்குப் பின் தாரம்' 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' என்று சிறு பிராயத்தில் கற்ற பாடம் நடேசனுடைய நினைவில் எப்பொழுதும் இருந்தது. நடேசன் ஒரு சுத்தமான பேர்வழி. 'தாய்க்கு எத்தகைய துன்பமும் மனைவியால் வரக்கூடாது' என்னும் நல்ல நோக்கத்தை உடையவன். ஆனால் தாயோ வேண்டுமென்று மருமகளைக் குறித்து அவதூறு சொல்பவள். தான் இருந்த வீட்டில் இன்னொருத்தி வந்து அரசு செலுத்துவ தென்றால், அது பெண்களுக்குப் பிடிக்குமா? முற்றும் பொறாமையினாலேயே மருமக்களை மாமியார் துன்புறுத்துகிறார்களல்லவா? மருமக்களில் நல்லவர்களையும் கூட சில மாமியார்கள் விரைவாகக் கெடுத்து விடுகின்றார்கள். இந்த உண்மைகள் எல்லாம் நடராஜன் அறிந்தவனல்ல. அவனுக்குத் தாய்ச் சொல்லே மந்திரம் ஆய்விட்டது. அவனுடைய விக்கிரமாதித்த சரிதம் அவனுக்கு வேத வாக்கியமே.

வசந்தை தன் மாமியின் சூட்டுச் சொற்களுக் கெல்லாம் சரியான தண்டனை அடைந்து வந்தாள். ஆனாலும், தன் மாமிக்கு ஒரு விதமான குற்றம் செய்வதில்லை.

ஒரு நாள் வசந்தை கலங் கழுவுகையில் ஒரு சிறு மண்சாடி கை தவறி

விழுந்து உடைந்துவிட்டது. பிராட்டி அதைப் பார்த்தாள். அவளுக்குக் கோபம் பொறுக்கவில்லை. பிராட்டி, "அடீ, நான்தெரிந்து வாங்கி வைத்திருந்த கலத்தைத்தானு உடைக்க வேண்டும்! சண்டாளி, நீ கால் வைத்த நாள் முதலாக வாழத்தான் செய்கிறது" என்று கோபித்து உரைத்தாள். அவள் மருமகளா இருந்த காலம் மலையேறிவிட்டதல்லவா?

நடேசன் தன்அலுவல்களை முடித்துவிட்டு இரவு எட்டு மணிக்கு வீடு வந்து சேர்ந்தான். பிராட்டி தன் மனைவியைக் கீழே தள்ளித் துடைப்பக்கட்டையால் அடிஅடி என்று மும்மரமாய் அடித்துக் கொண்டிருந்தாள். நடேசன் அதைப் பார்த்ததும், அவனும் தான் கையில் வைத்திருந்த வெள்ளி கட்டிய கோலால் தன் கைகள் ஓயும் வரை வசந்தையை அடித்தான். வசந்தைக்கு அறிவு மயங்கிவிட்டது. நடராசன் வசந்தை செய்த குற்றத்தை இப்போதும் உணர்ந்துகொள்ளவில்லை.

பிராட்டி, "நான் பொன் போல் ஒரு கலம் வாங்கி வைத்திருந்தேன். அதை வேண்டுமென்று இச்சிறுக்கி உடைத்துவிட்டாள்; பார், அவள் கொட்டத்தை" என்றாள். 'மருமகளுடைத்தால் பொன் கலம்' என்னும் பழமொழி எவ்வளவு உண்மையாய் விட்டது? பிராட்டி சொல்லியவை ஒன்றும் வசந்தைக்குக் கேட்கவில்லை. அவள் இறந்து விடுவாளென்றே நடராசனுக்குத் தோன்றியது. ஆயினும், அவன் சிறிதேனும் அஞ்சவில்லை.

அன்றிரவு கழிந்தது. ஏதோ நல்ல காலமாய் வசந்தை காலையில் எழுந்திருக்கலானாள். அவளுக்கு உண்டான கவலைக்கு அளவே யில்லை. நாகரீகப் பெண்களாயிருந்தாலன்றோ நடராசனை விட்டுப் பிரிந்திருப்பார்கள்! வசந்தை, 'கொண்டவனே குல தெய்வம்' என்னும் கொள்கையை உடைய உத்தமி. அவள் தன் கணவன் செய்த குற்றத்தை அறவே மறந்துவிட்டாள். "தெய்வமே, என் கணவனுக்கு நல்ல அறிவைக் கொடு" என்று மட்டும் அவள் இடையிடை கருதுவதுண்டு. அவளிடத்தில் வேறு குற்றங்கள் இருப்பதாக ஒருவராவது சொல்லமாட்டார்கள்.

ஒரு நாள் வசந்தை நோய் வாய்ப்பட்டாள். பிராட்டி அவளைச் சிறிதும் கருதவில்லை. நடராசன் வைத்தியர்களுடைய உபதேசப்படி அவளுக்கு வேண்டிய மருந்தும் உணவும் கொடுக்கும்படி தன் தாயாரிடத்தில் ஏற்பாடு செய்திருந்தான். பிராட்டி வசந்தைக்கு ஒருவித உதவியும் செய்யவில்லை. மருந்தைக் கொட்டிவிட்டு 'அவளுக்குக் கொடுத்தாயிற்று' என்று சொல்வது பிராட்டியின் வழக்கமாய் விட்டது. வைத்தியர்கள் சில நாள் கழிந்து வசந்தைகை பார்த்து, "இவளுக்கு இதுவரை மருந்து ஒன்றுமே கொடுக்கப்படவில்லை, ஆகாரம் இவள் உட்கொண்டதாகத் தெரியவில்லை. சிறிது விஷமும் உட்சென்றிருப்பதாகத் தெரியவருகின்றது. ஆதலால், இனிமேல் இவள் பிழைப்பது அருமை" என்று சொல்லிக் கைவிட்டு விட்டார்கள். அப்பொழுதுதான் நடராசன் தன் தாயின் கொடுமையை அறிந்தான். அவள் அதுவரை கூறியதெல்லாம் பொய் என்றும் தன் மனைவியினிடத்தில் யாதொரு குற்றமும் இல்லை என்றும் அவன் முற்றிலும் நம்பினான். அவனுக்கு மிகுந்த கவலை உண்டாயிற்று. புதல்வன் வாடிய முகத்தோடு இருப்பதைக் கண்ட பிராட்டி, "ஏன் கவலைப் படுகிறாய்? ஒன்று போனால் இன்னொன்று. சவம் செத்தால் போகிறது" என்றாள். இவ்வார்த்தைகள்

நடேசனுடைய நெஞ்சில் வேலாயுதங்கள் புகுந்தன போல் இருந்தன. அவனுக்குத் தாயினிடத்தில் வெறுப்பு உண்டாயிற்று. 'அடி சண்டாளி, இந்தக் கோலம் கண்டாயே. இனியாவது உனக்கு மனம் அடங்குமல்லவா?' என்று கூறினன்.

அவன் அது முதல் தன் தாய் சொல்வதைக் கேட்பதே இல்லை. தன்னாலான மட்டிலும் வசந்தையை மீண்டும் சௌக்கியப்படுத்தத் தொடங்கினன். இரண்டு நாள் அவள் மயங்கிக் கிடந்தாள். மூன்றாவது நாள் அவளுக்கு உணர்ச்சி ஏற்பட்டது. அவள் சிறிது கண்களை விழித்து நோக்கினள். தன் அருகில் கணவன் இருப்பதைக் கண்டாள். அவன் முகம் கவலையால் மூடப்பட்டிருப்பதைக் கண்டு வருந்தினள்.

நடராசன், "வசந்தா, நான் உனக்கு எவ்வளவோ துன்பங்களைச் செய்து விட்டேன். பேயைத் தாயென்று கருதி மிகுந்த பாபத்தைச் செய்து கொண்டேன். உன் நிலைமை இப்போது..............." என்று கூறிக் கொண்டே கண்ணீர் சொறிந்தான். இத்துணைக்கும் பிராட்டி இரங்கவே இல்லை. அவளுடைய உதடுகள் துடித்தன; கண்கள் சிவந்தன; முகம் சீறியது. பிராட்டி நடராசனுடைய வருத்தத்தைப் பொறுக்க முடியாதவளைப் போல் அங்கிருந்து போய்விட்டாள்.

வசந்தை தன் கணவனுடைய வருத்தத்தைப் பொறுக்க முடியாதவளாய் அழத் தொடங்கினள். நடராசன் 'அழாதே' என்று சொல்லிவிட்டுத் தானும் ஏங்கி ஏங்கி அழுதான். 'கவலைப்படாதீர்கள்' என்று சொல்லிக்கொண்டு வசந்தையும் தேம்பித் தேம்பி அழுதாள். பின் சிறிது ஆற்றிக்கொண்டு, வசந்தை நடராசனை நோக்கி, "என் அன்பே, ஏன் வருந்த வேண்டும்? எல்லாம் விதிபோல் நடக்கும். அன்று எழுதினதை அழித்து எழுதுவாரு? தாங்கள் கவலைப்பட்டு என்ன பயன்? எனக்கு ஒரு குற்றமும் தாங்கள் செய்துவிடவில்லை. கணவன் செய்யவேண்டியகடமைகளையே செய்தீர்கள். தாய் சொல்லை நம்பிச் செய்தது குற்றமாகுமா? நமக்கு இவ்வளவே இறைவன் அளித்தது. கவலைப்பட வேண்டாம். நாம் இருவரும் இன்னும் சேரவேபோகிறோம். என் உயிர் துடிக்கிறது, விடை கொடுங்கள்" என்று மிக இரக்கமாய்க் கூறித் தன் இரண்டு கைகளாலும் நடேசனைத் தழுவி அவன் கையை வாங்கி முத்தமிட்டு அவனை வணங்கினள். அவளுடைய உயிரும் பிரிந்தது. "ஆ!" என்று அலறி விழுந்தான் நடேசன். அவன் தாய் அவனிடத்திற்கு ஓடிச் சென்றாள். அவனுக்கு உணர்ச்சி இல்லை. பிராட்டி கூர்ந்து நோக்கினள்; அவன் கண்களை நன்றாய்க் கவனித்தாள்; அவன் மூக்கில் விரல்களை வைத்துப் பார்த்தாள். 'ஐயோ நான் இனி என்ன செய்வேன்?' என்று அலறி அழுதாள். இனி இருந்து அழுதாவதென்? அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ? நடராசன் நடராசனடியிணை சேர்ந்து விட்டான்.

ஒரு தமிழ் நாடகம்:

பாரிவள்ளல்

(ஸ்ரீ எம். என். எம். பாவலர் எழுதியது)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சோழன்:—பிறருக்குக் கெடுதல் செய்யாமல் சுதந்திரத்துடன் வாழும் ஒரு சிறிய நாட்டை நாம் பலாத்கரிப்பது தர்மமல்ல.

சேரன்:—அரசியல் தந்திரமறிந்தவர்கள், தர்மா தர்மத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க மாட்டார்கள். சேர பாண்டிய நாட்டிற்கிடையே அப் பறம்பு நாடிருப்பதால் எங்களுக்குச் சங்கடமாகத் தானிருக்கிறது. அதை நாங்களிருவரும் ஆளுக்குப் பாதியாகப் பகிர்ந்து கொள்ளுவதே நியாயம்.

சோழன்:—சாத்வீகமாக இருக்கும் ஒரு நாட்டை நாம் துன்புறுத்தலாமா? உலகம் என்ன நினைக்கும்? மேலும் பாரியிடம் போர் தொடுப்பதற்கு ஒரு காரணமுமில்லையே! அவன் நமக்குக் கேடு ஒன்றும் தேடவில்லையே.

பாண்டி:—சோழனே, பிற நாட்டின் சாத்வீக உணர்ச்சியைப் பற்றி நாம் எதற்காகக் கவலைப் படவேண்டும்? நமக்கு வேண்டுவது நாடு. அதை எந்த வழியிலேனும் பெறுதல் வேண்டும். அத்துடன் பாரியின் கொட்டத்தையும் அடக்க வேண்டும். 'உலகம் என்ன நினைக்கும்' என்று பயப்படுகின்றவர்கள் தன்னம்பிக்கையில்லாத கோழைகள்.

சேரன்:—பாரியிடம் நாம் போர் தொடுப்பதற்கு ஏதாவது காரணம் கண்டு பிடியுங்கள், இவ்வகையில் சோழருடன் விவாதம் வேண்டாம். இப்போரில் அவரும் சேர்ந்தால் அவருக்கும் சாதகம் கிடைக்கும்படி செய்யலாம். இல்லையேல் அவர் ஒதுங்கிக் கொள்ளட்டும்.

சோழன்:—சேர மகாராஜாவிற்கு மிகவும் வருத்த முண்டாக்கி விட்டேன். எனக்கும் ஏதேனும் இலாபஞ் செய்யுங்கள்! யான் தங்களுடன் போரில் சேர்ந்து கொள்ளுகிறேன்; யுத்தம் தொடுப்பதற்குப் போதிய காரணத்தைக் கண்டு பிடியுங்கள்.

பாண்டி:—இதுதான் சரி, நீங்களிருவரும் பேசிக் கொண்டிருக்கும் போதே ஒரு காரணத்தைத் தயார் செய்து வைத்திருக்கிறேன்.

சேரன்:—என்ன அது?

பாண்டி:—பாரதமும், இராமாயணமும் நடை பெறுவதற்கு ஒரே ஒரு பெண்ணே காரணமாயிருந்தது போல, இப்போருக்கும் பெண்ணையே ஆதாரமாகக் கொள்ளல் வேண்டும். பாரியின் புத்திரிகளை நமக்கு மணஞ் செய்து கொடுக்கும்படி தூது விடுப்போம். அவசியம் பாரி மறுப்பான். அதனையே காரணமாக வைத்துப் போர் தொடுத்து அவ்வரசை அழிப்போம்.

சேரன்:—நல்ல யோசனை, அதற்கானவை உடனே செய்யுங்கள்! நாங்

களும் இங்கு தங்கி இருக்கிறோம்.

பாரி நாடு

மந்திரி:—அரசே! நாம் எவ்வளவோ ஒழுங்காகப் பரிபாலனம் செய்யினும், ஜனங்களில் ஒரு சாரார் சில குறை கூறுகின்றார்கள். அவர்கள் கூறுவதில் சிறிது நியாயமும் இருக்கின்றதாக எனக்குத் தெரிகிறது.

பாரி:—மந்திரியாரே! என்ன குறை? என்ன நியாயம்! சற்று விபரமாகச் சொல்லுங்கள்?

மந்திரி:—நமது நாட்டில் கால மழை சரிவரப் பெய்யாமல், நீர் வளம் குன்றி விட்டது. அரசர் இச் சமயத்திலும் நீர் நிலைகள், ஏரி குளங்கள் வெட்டாமல் அரச பொக்கிஷத்திலிருக்கும் திரவியங்களைப் புலவர்கட்கு தினந் தினம் வாரிக் கொடுக்கிறார் என்று குடி மக்கள் வருத்தப் படுகின்றனர்.

பாரி:—இது அறியாமையினால் ஏற்பட்ட அபிப்பிராயமாகும்-புலவர் சன்மானம் செய்வது, அவர்கள் பொருட்டல்ல. அவர்கள் கற்றுள்ள தமிழ்க் கல்வியின் பொருட்டே அத்தகைய பொருளை அளிக்கின்றோம். தமிழ் மொழியைப் பொருள் கொண்டு நம்மைப் போன்றோர் வளர்க்காவிடில், தமிழ் மொழி வர வரக் கீழ் நிலையை அடைந்துவிடும். கன்னித் தமிழைக்கடல் கொண்டது அன்று. இன்று இருக்கும் தமிழையாவது நாம் காப்பாற்றாவிடில் காலக் கூற்றுவன் கொண்டு போய் விடுவான். அமுதினு மினிய நமது தமிழ் மொழி தெய்வ மொழி—தெய்வ மொழியும் தாய் மொழியும் தென் மொழியும், பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து, சங்கத் திருப்பிலே இருந்து, வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை நெருப்பிலே நின்று, கற்றோர் நினைவிலே நடந்தோரென, மருப்பிலே பயின்ற பாவை, மருங்கிலே, வளருகின்றாள்.

இவ்வரு மொழியை தமிழ் வேந்தனாகிய யான் காப்பாற்றி வளர்க்காவிடில் எனது செங்கோல் வெறுங் கோலாகும். நாடெங்கும் தமிழ் மணக்க வேண்டுமென்பதே எனது பேரவா. காலங் கண்ட தமிழ் மொழி-தோன்றும் போதே இலக்கிய மிலக்கணம் கண்ட தமிழ் மொழி—இயல் இசை நாடகம் என்று முப்பிரிவினை ஒருங்கே கொண்ட தமிழ் மொழி இம் மொழி வளர்ச்சியின் பொருட்டே, நான் இவ்வரசுரிமையை ஏற்றிருக்கிறேன். தமிழனாய்ப் பிறந்தேன், தமிழனாக வளர்ந்தேன், தமிழனாய்த்தான் தமிழுக்காகவே மாணமடைவேன்; இது உறுதி. யான் பிறந்த நாடு தமிழ் நாடு என்று எக்காளம் கொட்டிக் கூறுவேன்; பல் காலும் கூறுவேன்.

“நந்தமிழ் மோழி யென்ற
போதினிலே—மனம்
நல்ல தேன்றே துள்ளி
ஆடுதய்யா
செந்தமிழ்ப் பாவோன்றைக்
கேட்டு விட்டால்—என் சிந்தை
குளிர்ந்து மயங்குதைய்யா”

இதுவே எனது உள்ளக் கிடக்கை; இதன் பொருட்டே எனது நாட்டிலுள்ள முந்நூறு கிராமங்களையும் புலவர்களுக்காக சன்மானித்திருக்கிறேன். அவர்கள் கவலையின்றி நாடெங்கும் சென்று தமிழைப் பரப்பி வருவார்கள். தமிழ் மொழியே தெய்வ மொழி—அதுவே நம்மைக்காக்கும் மொழி, கருணை மொழி; வாழ்க தமிழ் மொழி இவ்வைய முள்ளளவும்!

மந்திரி:—தாங்கள் கூறியது முற்றிலும் உண்மை. எனினும், நாட்டில் மழைவளம் குன்றியதால்தான் ஜன அபிப்பிராயம் இவ்விதம் மாறிற்று.

பாரி:—ஆம், இது மக்களின் நியாயமான குறையே. பரிகரிக்கவேண்டியதே. இக்குறை தமிழ்ப் புலவர்களாலேயே தீர வேண்டும். கபிலர் பெருமானே! எங்கே தாங்கள் இதற்கு ஒரு வழி செய்யுங்கள்!

கபிலர்:—

புல்லுண வானுன் பால்—
  பொழிய வருளாள் வார்
நெல்லுண வானின்றுன் நீர்
  பொழிய—நல்லுணர் வால்
பாரி பொழிந்த பயனுர்
  பெருங் கோடையின்
மாரி பொழிக மழை;

காவலன்:—வணக்கம். பாண்டிய தேசத்திலிருந்து ஒரு தூதுவர் வந்திருக்கிறார். தங்களைப் பார்க்க வேண்டுமாம்.

பாரி:—நல்லது அழைத்துவா!

மந்திரி:—அரசே! நமஸ்காரம்; பாண்டிய மன்னன் இவ்வோலையைத் தங்களிடம் சமர்ப்பிக்கும்படி ஆக்ஞாபித்தார். சேர சோழ மன்னர்களும் அவ்விடத்திலேயே இருக்கின்றனர்கள். பதில் உடனே எதிர் பார்க்கின்றனர்கள்.

பாரி:—எங்கே? (படித்தல்) என்ன ஆணவம் இது!

கபிலர்:—என்ன விபரம்? சற்று மனச்சாந்தி கொண்டு தெரிவியுங்கள்.

பாரி:—சேர, சோழ, பாண்டிய மன்னர்களுக்கு எனது பெண்களைக் கன்னிகாதானமாகக் கொடுத்து அவர்களிடம் இனி, நான் அடங்கி நடத்தல் வேண்டுமாம். என்ன அகங்காரமவர்களுக்கு?

(சற்று சிரித்து) பெண் வேண்டுமாம். அந்த மூவேந்தர்கட்கும் அறிவு அஸ்தமித்துப் போயிற்று. எனக்குக் குமாரிகள் இருவர். மூன்று அரசர்களுக்குப் பெண் கொடுத்தல் வேண்டுமாம். நான் கூறு போட்டுக் கொடுப்பதோ—தூதரே! போய்க்கூறும், உமது மன்னரிடம். யுத்தகளத்தில் ஈட்டிமுனையில் அவர்கட்குப் பதில் சொல்லுவதாகக் கூறும். போம் வெளியே.

தூதுவன்:—பதில் ஒரு ஓலையில்...

பாரி:—போர் முனையில் சந்திக்கிறேன். போய்ச் சொல்.

போர் முரசு

சேர:—பறம்பு நாட்டைச் சுற்றிலும் அமைந்திருக்கும் மலை, குன்றுகளே சிறந்த அரண்போன்று விளங்குகிறது. மிகவும் செழிப்புள்ள நாடுதான்.

சோழ:—நாம் பாரியைப் போரில் வெல்ல முடியாதென்றே நினைக்கிறேன்.

பாண்டி:—ஆம்; அதை உத்தேசித்தே முதலில் பறம்பு நாட்டைச் சுற்றிலும், கடுமையாக முற்றுகையிட்டிருக்கிறேன். பறம்பு நாட்டிற்கு யாதொரு பண்டங்களும் வெளியிலிருந்து உட்போகாதபடியும், உள்ளிருந்து எவரும் வெளியே போகாமற்படிக்கும், முற்றுகையிட்டால் அந்நாட்டிற்குள் உணவுப் பஞ்சம் ஏற்படும். பசி ஏற்படப் பத்தும் பறந்து போம், என்ற பழமொழிப்படி பாரி தானகவே பணிந்து வருவான். படை அழிவும் ரணகளமும் ஏற்படாத வழி இது. பட்டாளத்திற்குப் பசி ஏற்பட்

டால் உள்நாட்டுக் குழப்பமும், படையில் பிளவும் ஏற்படும்.

சேர:—மிகவும் நல்ல யுத்த தந்திரம்.

மேளம் தட்டுதல்

பாரி:—போர் வீரர்களே! வலுத்தவன் இளைத்தவர்கள்மீது பழிபோட்டு பலாத்காரத்தினால் ஒடுக்கிவிடப் பார்க்கும் அநீத முறை வலுத்து வருகிறது. நாம் சிறிய நாட்டினரேயாயினும் தர்மத்தையும், சுதந்திரத்தையும், நமது அடிப்படையான கொள்கையாகக் கொண்டு வாழ்ந்து வருகிறோம். நாம் பிறருக்கின்னல் செய்ய மனதாலும் எண்ணிலோம், ஆனால் நமக்கின்னல் செய்ய எண்ணினரை சுலபத்தில் விட்டு விடோம். ஜனத் தொகையில் நாம் குறைவானவர்களாக இருக்கலாம். ஆனால் நமது போர் வீரர் மனத்துணிவில் மிஞ்சியவர்கள். ஒவ்வொருவரும் தன் நாடு, பறம்பு நாடு என்ற உணர்ச்சியுடன் போரிடுவார்கள், என்ற நம்பிக்கை எனக்குண்டு. நமக்கினி வாழ்வா சாவா என்பதை இப்போது நடைபெறும் யுத்தமே முடிவு செய்யும். எனது வீரர்களே! சோர்வடையாமல் யுத்த தந்திரத்துடன் போர் செய்து வெற்றி காணுங்கள்! முற்றுகையிட்டால் நாம் வணங்கிப் போவோம் என்று அவர்கள் எண்ணும், அவ்வெண்ணத்தில் மண்விழச் செய்ய வேண்டும் நாம். புறப்படுங்கள் எல்லோரும்! வீரலட்சுமி உங்கட்குத் துணையிருப்பாள். இதோ நானும் வருகின்றேன்.

கபிலர்:—

பாரி வள்ளல் வாழ்க!
பறம்பு நாடு வாழ்க!
பண்டைத் தமிழ் வாழ்க!
பாரி மன்னன் வாழ்க!

(ஜனசப்தம் ஓய்தல்)

கபிலர்:—முற்றுகையிட்ட மூவேந்தர்களே! உங்களின் செய்கை அறிஞரால் வெறுக்கத் தக்கதுமட்டுமல்ல; உங்களின் வம்சமே இதற்காக வெட்கப்பட வேண்டிய காலம் வரும். ஒரு சிற்றரசன்பால், முடியுடை மூவேந்தர்களாகிய நீங்கள்—காரண காரியமின்றியும், யுத்த தர்மத்திற்கு எதிர் மறையாகவும், போர் தொடுத்து முற்றுகை யிட்டிருக்கிறீர்கள்.

சேர:—(உரக்கமாய்) யாரது இவ்வளவு துணிகரமாய்ப் பேசுபவர்?

பாண்டி:—அவர்தான் கபிலரென்ற பாவலர்.

கபிலர்:—நீங்கள் எத்தனை ஆண்டுகள் முற்றுகை யிடினும் பறம்பு நாட்டை வெல்லுவது முடியாதகாரியம். ஏனெனில் பாரியின் நாடு மலைவளங் கொண்டது. இம்மலைகளிலிருந்து வரும் அருவி, பறம்பு நாட்டைச் சேருக்கிச் செல்வதால் எங்களுக்கு ஏர் கொண்டு உழவேண்டிய அவசியமேயில்லை. நிலங்களை வெளியூர் ஆட்களைக் கொண்டு உழாமல் மலை நதி மூலமே நாங்கள் உழுது கொள்கிறோம்.

பாண்டி:—(தூர நின்று) கபிலரே! உழுது விட்டால் போதுமா! அது பயிராகும்வரை உணவிற்கு என்ன வழி செய்வீர்?

கபிலர்:—எங்கள் அரணுக்குள் தென்னை, வாழை, மா, பலா, முதலிய கனி மரங்கள் எங்கும், காய்த்துக் கனித்து, வெடித்துக் கிடக்கின்றன. மலை மூங்கில்களின் அரிசியும், மலை

யுறுதேனும் எங்கள் பாரி மன்னனின் உள்ளம்போல் மலிந்து கிடக்கின்றன. விறகாக சந்தனக் கட்டைகளை உபயோகிக்கிறார்கள். மலை அரிசியை எங்கள் பெண்கள் யானைத் தந்தத்தால் குத்தி உமி போக்குகிறார்கள். இவ்வகையில் உணவும் நீரும் உபகரணமும் எங்கட்கு ஏராளமாக இருக்கையில், பல்லாண்டு நீங்கள் முற்றுகையிட்டாலும், எங்கட்குப் பசிப் பஞ்சம் ஏற்படாது என்பதை, அரசியல் சூன்யர்களான நீங்கள் அறிவீரோ!

பாண்டி:—கபிலரே! பதட்டமாகப் பேசாதீர்! பாரியைப் போரில் வென்று, உம்மையும் சிறை பிடித்துச் சென்று என்மீது பாமாலையிடச் செய்கிறேன் உம்மை...........

கபிலர்:—போதும் உமது வீரம். நீங்கள் மூவேந்தர்களல்ல; முப்பது வேந்தர்கள் படையெடுத்து வரினும் எங்கள் நாட்டைக் கைப்பற்ற இயலாது. வேந்தர்களே! ஒருக்கால், பாமணக்கும் பாரி உறையும் பறம்பு நாடும், உங்கட்கு இருத்தல் வேண்டுமென்ற விருப்பம் இருப்பின், போர் முகத்தை விட்டு ஓடி, அழகிய மாதர்களைக் கொண்டு எங்கள் பாரிவேளின் முன் ஆடிப் பாடினீர்களாயின், அவர் சந்தோஷப்படுவார். அது சமயம் உங்கள் ஊழியத்திற்கு நாடுகேட்டால் நன்கொடையாக அளிப்பானேயன்றி, போரில் வென்று நாடு அடையப் பார்ப்பது பகற்கனவே யாகும்.

(ஜனசப்தம்)

பாண்டி:—என்ன இது திடீரென நமது படைகள் பின்வாங்கி ஓடுகின்றன. பாருங்கள்! வாருங்கள்.

சோழ:—ஆமாம்—கபிலருடன் நாம் பேசிக் கொண்டிருக்கையில் பாரி பின்புறம் சென்று படையை அழித்துத் துரத்தி விட்டான். வாருங்கள், முதலில் நாம் உயிர்தப்பும் வழியைத் தேடுவோம் ஓடுங்கள்!

பாரியின் சபை

பாரி:—சேனைத் தலைவர்களே! தளபதிகளே! போர் வீரர்களே! நேற்று முடிந்த யுத்தத்தில் நீங்கள் காட்டிய பராக்ரமச் செயலை நான் மிகவும் பாராட்டுகிறேன். முப்பெரும் வேந்தர்களைப் புறமுதுகிட்டோடச் செய்த நிகழ்ச்சி, சரித்திரத்தில் பொன்னெழுத்தால் பொறிக்கப்படும். உங்கள் வீரதீரச் செயலுக்கேற்ற சன்மானங்களைப் பெற்றுக் கொண்டு செல்வீராக. வெற்றிக் கறிகுறியாக நகரமெங்கும் கேளிக்கைகளும் பண்ணிசைத்தலும் நடைபெறட்டும். ஆலயங்களில் விசேஷ பூஜை நடக்கட்டும்.

காவலன்:—பிரபு, நமது வெற்றி விழாவில் கலந்துகொள்ள, இரு நடன மாதர்களும் அவர்கட்குத் துணையாக மூன்று பாணர்களும் வந்திருக்கிறார்கள்.

பாரி:—அழைத்துவா ....பாணர்களே! எங்கே உங்கள் பண்ணிசையையும், இம் மங்கையர்களின் நாட்டியத் திறமையையும் காண்பியுங்கள். திறமைக்கேற்றவிதம் தக்க சன்மானமளிப்போம்.

பாணர்:—நல்லது.

[நடனமும் பாட்டும்]

(காதலியே தாய்தந்தைதனக்கு-மெட்டு)

பல்லவி

பாரினிலே புகழ் பாரியெனுமரசே
பாவலர்-நாவலர் போற்றிடும் பூமா

அநுபல்லவி.

கோரி வந்தோமுனை குணதனவானே
குவலய மதுபுகழ் குலப்பெருங் [கோனே!

[அ. எடுப்பு]

வீரமணி விளங்கும் விதரனே [குணனே
விமல கமலனே விகிசிதநுபா
மாரமலர்க் கணைபோலுநவதன
மலரடி யனுதினம் துதியது செய் [தோம் (பாரினிலே)

பாரி:—பாணர்களே! உங்கள் திறமையை வியந்தேன். இம்மாதர்கள் நடனக் கலையில் தேர்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. உங்களுக்கு வேண்டும் சன்மானத்தைக் கேளுங்கள்.

பாணன்:—கேட்பின், தாங்கள்......

பாரி:—சந்தேகம் வேண்டாம். விரும்பியது கேளுங்கள். தடையின்றிக் கொடுக்கின்றேன்.

1-பாணன்:—தங்கள் உயிரை வேண்டினோம்.

2-பாணன்:—தங்களின் நாட்டை விரும்பினோம்.

3-பாணன்:—இவ்விரண்டு சன்மானங்களே எங்கள் மனதை மகிழ்ச்சி செய்யும்.

பாரி:—அறிந்தேன். உங்கள் மூவரையும். அன்று போரில் புறங் காட்டி ஓடிய சேர, சோழ, பாண்டியர்களாகிய நீங்கள் மாறு வேடத்துடன் வந்து, அன்று கபிலர் கூறியபடி பாணர்கள் போல நடித்து, ஆடிப் பாடினீர்கள்; என்ன இழிதகைமை! முடிவில் எனது உயிரையும் நாட்டையும் கேட்டீர்கள். சரி! அவ்விதமே இரண்டையும் உங்கட்கு தானமளித்தேன். இதோ ஏற்றுக் கொள்ளுங்கள்.

வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்! தமிழ் வாழ்க!

தமிழே எனது உயிர்!
தமிழே எனதுள்ளம்!
நான் பிறந்த தமிழ் நாடு!
தமிழ் நாடு......தமிழ்......

(மூர்ச்சையாதல்)

(சென்னை ரேடியோவில் 23-7-40ல் ஒலி பரப்பப்பட்டது. அனுமதியுடன் பிரசுரித்தது.)

டோங்ரேயின்
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு பிரசித்தி பெற்ற டானிக்

வஞ்சிக்கொடி

(அ. கோபால ரத்னம்)

"போன ஜென்மத்தில் நீரும் நானும் மிருகங்களாயிருந் திருக்கலாம்; அடுத்த ஜென்மத்தில் செடி, கொடிகளாயிருக்கலாம்; யார் கண்டார்கள்?" என்றார் டாக்டர் பொன்னம்பலம்.

'வாஸ்தவம்' என்றேன் நான். அந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் யாருடன் பேசும்படி நேரிட்டாலும் அவர்கள் சொல்வதை உடன் ஆமோதிக்கும்படி எனக்கு முன்னடியே எச்சரிக்கை செய்யப் பட்டிருந்தது. பைத்தியக்காரர்கள், மறுப்பைப் பொறுக்க மாட்டார்கள்.

'டாக்டர்' பொன்னம்பலம் என்னை ஒருதட்டுத்தட்டினர். "பேஷ், நீர்புத்திசாலியானதால் நான் சொல்வதை ஒப்புக் கொள்கிறீர். ஆனல் மாணிக்கத்தின் கதையைக் கேட்டால் இதன் உண்மை உமக்கு விளங்கும். சொல்கிறேன் கேளும்; அன்றைய தினம் பெரிய நாடார் திடீரென்று இறந்து போய் விட்டாரென்று கேட்டவுடனே எனக்கு ஆச்சரியமா யிருந்தது. வயது எழுபத்தி மூன்றுதான். ஆயினும் அவர் மிகுந்த தேகக் கட்டுள்ளவர். சாகக் கூடியவரல்ல; நானே உடனே நேரில் போய்ப் பிரேதத்தைப் பரிசோதித்தவுடன் என் ஆச்சரியம் சரியாய்ப் போயிற்று! பெரிய நாடாரின் கழுத்தில் காணப்பட்ட வடுக்கள் உண்மையைக் கூறின. யாரோ அவர் கழுத்தைப் பிடித்து நெருக்கி அவரை மறு உலகுக்கு அனுப்பி விட்டிருக்கிறார்களென்று அறிந்தேன். பிரேதத்தைப் பரிசோதித்து விட்டு நான் நிமிர்ந்து அருகில் நின்ற மாணிக்கத்தைப் பார்த்த பொழுது அவன் கண்கள் என்னை ஒருவாறு கூர்மையாய் நோக்கிக் கொண்டிருந்தன. "ஜமீன்தார் சாதாரணமாய் இறக்கவில்லை..." என்று நான் வாயெடுப்பதற்குள் மாணிக்கம் என்னை நோக்கி, "டாக்டர்! ஜமீன்தார் இன்று காலையில் மார்படைப்பால் திடீரென்று இறந்து விட்டார். வயதும் பலஹீனமான இருதயமுமே இதற்குக் காரணம்.' என்றான். நான் ஒரு விநாடி திகைத்து விட்டேன். மாணிக்கம் உண்மையை மறைக்க முயல்வதின் கருத்து எனக்கு உடனே விளங்கவில்லை. ஆயினும் சிறிது நேரத்தில் என் அந்தகாரம் விலகியது.

"மாணிக்கம் பெரிய நாடாரின் தத்துப் புத்திரன்; சகல கெட்ட குணங்களும் நிறையப் பெற்றவன். பெரிய நாடார் இருக்கும்வரை ஜமீன் சொத்தை இஷ்டப்படி கையாள முடியவில்லையென்று இந்த அக்ரமத்தை அவனே செய்திருக்கிறான். நாடாருக்கோ வேறு சந்ததியில்லை

யல்லவா! என்னும் யோசனைகள் என் மனதில் தோன்றின. இதற்குள் மாணிக்கம் 'என்ன டாக்டர்! பெரியவர் மாரடைப்பால் இறந்து விட்டாரென்று அத்தாட்சிப் பத்திரம் கொடுக்கப் போகிறீரா, இல்லா விட்டால்—' என்ருன். அவன் வாக்கியத்தை முடிக்கவில்லை. 'இல்லா விட்டால் நீரும் அவருடன் துணை போகிறீரா?' என்றுதான் அதன் அர்த்தம். மாணிக்கத்தை விரோதித் துக் கொண்டவர் மறுநாள் இவ் வுலகில் உயிருடனிருப்ப தில்லை. ஆகவே, நானும் அவனிஷ்டப்படி பொய் அத்தாட்சி கொடுத்தேன்...... சில வருஷங்கள் சென்றன...மாணிக் கம் ராஜ்யம் கொடி கட்டிப் பறந்தது! ...ஒரு நாள், ரப்பர் தோட்ட விஷய மாக 'மலேயா' போய்த் திரும்பிவந்த மாணிக்கம் அன்றைக்கே என்னைக் கூப்பிட்டனுப்பினன். பங்களாவின் மேற்குச் சுவரோரமாக ஒரு புதிய குழி தோண்டப்பட்டு அக் குழியில் ஒரு அழகிய இளஞ்செடி நடப்பட்டி ருந்தது. மாணிக்கத்திற்குச் செடி கொடிகளில் பிரேமை மிகவும் அதி கம். அது ஒன்றுதான் அவன் நற் குணம் எனலாம்; அந்தச் செடியி னருகே நின்று கொண்டிருந்த மாணி க்கம் அதைப் பெருமையுடன் சுட்டிக் காண்பித்து 'டாக்டர்! இது 'வஞ்சிக் கொடி' என்று பெயராம். மலேயாவி லிருந்து இதைக் கொண்டு வந்தேன்.

'இந்தக் கொடியை யாரும் கையால் தொடக்கூடாது. தொட்டால் நாசமாகி விடுமாம். இந்தக் கொடியின் பெரிய ஆச்சரிய மென்ன வென்ருல் இதன் பூ மனிதரின் வாயைப் போலவே யிருக்கிறது! உள்ளே பல்லில்லை; அவ் வளவுதான் வித்தியாசம்! இதன் புஷ் பத்தை மலேயாவில் நானே கண் டேன். இந்தமலர் காலையில் மலருமாம், பூச்சிகள் புஷ்பத்திற்குள் நுழைந்தால் பூ உடனே மூடிக் கொள்ளுமாம், பூச்சிகள் ஜீரணமான பின்பு மறுபடி திறக்குமாம்!' என்ருன்.

"அக்கொடியின் தண்டு ஒரு விரல் பருமனுக்கிருந்தது. நிறம் பசலைக் கொடித் தண்டின் நிறம் போல் சிவந்திருந்தது. தண்டு முழுவதும் மயிர்கள் போல் சிறு சிதள்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. மாணிக்கம், 'டாக்டர்! இதை நான் மலேயாவி லிருந்து கொண்டு வருவதற்குள் மிக வும் சிரமப்பட்டுப் போனேன். ஏனென்ருல் இதைக் கையால் தொடக் கூடாதல்லவா?' என்ருன். திடீரென எனக்கு இறந்து போன பெரிய நாடாரின் ஞாபகம் வந்தது. அந்தச் சமயத்தில் அவர் ஞாபகம் ஏன் வர வேண்டும்?......நாட்கள் வாரங் களாயின...வாரங்கள் ஒரு மாதமு மாயின. ஒரு நாள் தோட்டக்கார கன்னையன் இறந்து போய் விட்டான். அன்று என்னைக் கூப்பிட்டனுப்பி ஞன் மாணிக்கம். மாணிக்கமே அன்று தன் கையால் வஞ்சிக் கொடிக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான். 'பாவம், கன்னையன் போய் விட்டான்; அவனில்லாவிட்டால் இந்தக் கொடி இவ்வளவு செழிப்பாய் வளர்ந்திருக் காது' என்றேன் நான். மாணிக்கம் 'ஆம்! மலேயாவில் கூட இந்தக் கொடி இவ்வளவு செழிப்பாயில்லை! டாக்டர், கொடியின் நுனியை அதோ

மேலே பார்த்தீரா? என் படுக்கையறை ஜன்னல் வரை ஏறி விட்டது. அங்கே ஒரு மொட்டுக் கூட விட்டிருக்கிறது. வாரும், காண்பிக்கிறேன்' என்று கூறி மாணிக்கம் என்னை அவன் படுக்கையறைக்குள் அழைத்துச் சென்று ஜன்னல் கம்பியின் மேல் தங்கியிருந்த வஞ்சிக் கொடியின் மொட்டைக் காண்பித்தான். 'மொட்டு நாளைக்குக் காலையில் பூக்கும்! கொடி ஜன்னலுக்கு மேலே ஏறி விட்டது. அதற்கு இங்கு ஒரு, பிடிப்புக் கட்டச் சொல்ல வேண்டும்;

இல்லா விட்டால் காற்றில் நழுவி அறைக்குள் விழுந்து விடும்! டாக்டர், காலையில் அவசியம் வந்து பாருங்கள், புஷ்பத்தின் அழகை!' என்றான் பெருமையுடன். பாவம்!...மறுநாள் அதிகாலையில் என் வீட்டுக் கதவை மடு மடவென்று தட்டிய ஓசை கேட்டு விழித்துக் கொண்டு போய்ப் பார்க்கவும், வெளியில் மாணிக்கத்தின் வேலையாள் நாகப்பன் நின்றிருப்பதைக் கண்டேன். 'டாக்டர், உடனே ஓடியாங்க! எஜமான் ஒரு மாதிரி யிருக்காங்க!' என்றான் அவன். .....படுக்கையறையில் மாணிக்கம்

கட்டிலின் கீழ் இறந்து கிடந்தான்! கண்கள் பயங்கரமாய் விழித்துக் கொண்டிருந்தன. கால்கள் விறைத்துப் போயிருந்தன. கைகள் கழுத்துப் பக்கம் சென்றிருந்தன. அந்தக் கழுத்தைச் சுற்றி...ஆ—அந்தக் கழுத்தைச் சுற்றி...என்ன இருந்தது தெரியுமா?...ஆம், அந்த வஞ்சிக் கொடி ஒரு சிவந்த பாம்பு போல் மாணிக்கத்தின் கழுத்தை இறுக்கிச் சுற்றிக் கொண்டிருந்தது. கொடியின் நுனி காற்றில் அலைந்து கொண்டிருந்தது. திடீரென்று அப்பொழுது யாரோ,

அடக்கமாகச் சிரித்தது போல் சத்தம் கேட்டது. நான் திடுக்கிட்டுத் திரும்பி 'யார் சிரித்தது?' என்றேன் நாகப்பனை நோக்கி. 'நான் சிரிக்கவில்லையே சாமி' என்றான் அவன்... அறை முழுவதும் கம்மென்று வாசனை வீசியது. ஜன்னல் பக்கம் திரும்பினேன். வஞ்சிப் பூவின் உதடுகள் விரிந்திருந்தன. அந்த உதடுகளைக் கண்டதும் எனக்கு உடம்பு சிலிர்த்தது! இறந்து போன பெரிய நாடாரின் பல்லில்லா வாய், சிரிக்கும் போது அதே மாதிரிதான் இருக்கும்!...... உண்மையை யாரறிவார்கள்? நாம்

நடந்திருப்பதை ஒருவாறு ஊகிக்கலாம். அவ்வளவுதான்! இரவில் மாணிக்கம் கட்டிலை ஜன்னலருகே இழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறான்......எழுந்ததும் புஷ்பத்தைப் பார்ப்பதற்குப் போலும்!...இரவில் காற்றில் கொடி நழுவி விழுந்து மாணிக்கத்தின் கழுத்தில் பட்டு சற்று நேரம் காற்றில் ஆடி உராய்ந்திருக்கிறது! உடனே அதன் மயிர்கள் போன்ற சிதள்கள் கழுத்தில் பொத்துக் கொண்டிருக்கின்றன.........வஞ்சிக் கொடி ஒரு கடோ விஷக்கொடி இந்த விஷம் சிதள்கள் மூலமாய் இரத்தத்தில் பரவி மாணிக்கத்தை எழுந்திருக்கச் செய்திருக்கிறது. எழுந்தவுடன் விஷ வேகத்தில் மாணிக்கம் மூர்ச்சையடைந்துவிடவே, கொடி கழுத்தைச் சுற்றிக்கொண்டு தன் வேலையைப் பூர்த்தி செய்திருக்கிறது.................இதுதான் நடந்திருக்கும், அதாவது அந்தக் கொடி ஒரு சாதாரணக் கொடியென்று வைத்துக் கொண்டால்! ஆனல், இறந்துபோன பெரிய நாடார் தன்னைச் கொலை செய்த மாணிக்கத்தின்மேல் பழிக்குப் பழி தீர்த்துக் கொள்ள மறு ஜன்மம் எடுத்தாரென்றும், அந்த ஜன்மந்தான் இந்த வஞ்சிக் கொடியென்றும், வைத்துக் கொண்டால்.........ஐயோ! அந்தச் சிவந்த பல்லில்லாத வாய் போன்ற புஷ்பத்தின் சிரிப்பும், மாணிக்கத்தின் கழுத்தைச் சுற்றிப் பாம்பு போல் ஆடின அக் கொடியின் ஆட்டமும்——" டாக்டர் பொன்னம்பலத்தின் தேகம் நடுங்கியது; விழிகள் அசைவற்று நிற்கலாயின; நெற்றியில் வியர்வை அரும்பியது.

"டாக்டர்! அது போச்சு! வாங்க குளிக்கலாம். சாப்பாடு தயாரா யிருக்குது!" என்று அவரைத் தட்டிக் கொடுத்தான் வார்டன். டாக்டர் பொன்னம்பலம் சாந்த மடைந்து வார்டனைப் பின்பிற்றிச் சென்ருர்.

இந்த விநோதக் கதை ஒரு பித்தனின் மூளையின் அற்புதமா, அல்லது இதில் உண்மை யிருக்கிறதா?

ஜகத்ரக்ஷக

ஸ்ரீ ஷண்முகன் யந்திரம்

12,58,400, ஜனங்கள் போற்றுவது

ஆறு வருடம் பலன் தரும்.

ஜன வசீகரம், லாட்டரி பந்தயம், வியாபாரம், உத்தியோகம், பலன் தரும். பேய், பிசாசு துற் சொற்பனம் நீங்கும். விவகாரம் வெற்றி, குடும்ப ஒற்றுமை, புத்திர மகிழ்வும், கரும வியாதிகள் குணமாகும் சத்துரு பணிகுவர், தரித்திரம் விலகிவிடும். உண்மையில் (ஸ்திரி புருஷர்) காதல் வெற்றி தரும். ஸ்திரிகள் அணிந்தால் மேல் சொல்லிய பலன் தருவதும் சூதகவலி உற்பவ சின்னங்கள் தீரும் குழந்தைகள் அணிந்தால் சகடை பாலரிஷ்டம், பக்ஷி தோஷம் முதலிய 4448 தோஷங்கள் தீரும். ரூ. **2.**

மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,

வாலாஜாபாத் P. O. S. I. R. சென்னை.

அட ஈஸ்வரா!

(A. M. ரஷீத்)

அன்று எனக்குக் கொஞ்சங் கூட உற்சாகமே இல்லை. "சாயா" விற்குக்கூடப் பொருளாதார நிலைமை இடங் கொடுக்கவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! இதில் என் மனைவி மாலதி, வீட்டில் சிலவிற்குப் பணமில்லை என்று ருத்திரசீன் ஒன்றை என் முன்பு நடித்துக் காட்டினாள். பிறகு தகப்பனுரைப் பிள்ளைகள் காசிற்காகத் தொந்திரவு படுத்தும் கட்டம் வந்தது. இதெல்லாம் போதாதென்று கடன்காரர்கள் ஒருவர் பின் ஒருவராக வர ஆரம்பித்ததும், 'பிழைத்தேன், பிழைத்தேன்' என்று "சிவபெருமான் பார்க்"கை நோக்கி காலப் (Gallop)பில் கிளம்பி விட்டு மறுகாரியம் பார்த்தேன்—கொஞ்சம் நிம்மதியுடன் இருக்கலாமென்றுதான்.

அங்கு என் பழைய சிநேகிதன் கண்ணன் உட்கார்ந்திருந்தான். குடும்ப ராம—ராவண யுத்தமோ என்னவோ அவனுக்கும்! என்றாலும் எனக்கே ஆறுதல் சொல்லும் பாவனையில் ஆரம்பித்தான்.

"என்ன ராஜு!...ஒரு மாதிரியாக இருக்கின்றாயே!..."

"எல்லாம் குடும்பக் கவலைதான்... கலியாணத்திற்கு முன்தான் எல்லா ஜாலியும்..."

"நீ என்ன அப்படிக் கவலைப்படுவது? அப்படிப்பட்ட சங்கரன் எல்லாம் குடும்பத்தைச் சுமந்து வருந்தாமல் இருக்கும் பொழுது...ம்...சங்கரன் இருந்த இருப்பென்ன?..."

"யார் அந்தச் சங்கரன்?"

"பாவம்! பெரிய அப்பாவி அவன்! அவன் படும் கஷ்டம்..."

"என்ன கஷ்டப் படுகின்றான்?..."

"எல்லாம் கால வித்தியாஸம்தான் ...அவன் ஊரை விட்டு வூர் போய், அதுவும் வட நாட்டிற்குப் போய் ஒரு பெண்ணை மணந்து கொண்டது பெரிய தவறு..."

"சரி அவன் கதையைத்தான் சொல்லேன். கொஞ்சம் ஆறுதலாகவாவது இருக்கட்டும்"

"சரி, சொல்றேன் கேள். கலியாணமான புது ஜோரில் அவனைப் பார்க்க வேண்டுமே! சதா மனைவிக்குப் பக்கத்தில்தான். வாழ்க்கையின் மாயத்தை அறியாது இந்தக் குமிழி எப்பொழுதும் நிலைத்திருக்குமென்று எண்ணி இருந்தான்...அவனுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. மூத்தவனுக்கு மனித உடலே கிடையாது; மிகவும் வக்கிரமாய் அமைந்தான். சங்கரனுக்கு அவனைத் தன் மகன் என்று சொல்லிக் கொள்ளக் கூட வெட்கம்!

"இளையவன் அவனுக்கு நேர் விரோதம். நாகரீகம் பூத்த மலர் என்று கூடச் சொல்லி விடலாம். தான் கண்டு மோகித்த ஒரு தாழ்ந்த ஜாதிப் பெண்ணை அவன் மணந்து கொண்டால் தகப்பனார் மனம் எவ்வளவு புண்படும் என்று யோசித்தானா? அல்லது தமையனுக்கு முன் கலியாணம் செய்து கொள்வது அழகா என்று தான் எண்ணினானா?

“இதை எல்லாங் கண்டு சங்கரன் மனம் நொந்தான். தன் கவலையில் தன்னைக்கூடச் சரிவர கவனிப்ப தில்லை. எண்ணெய் தேய்த்துக் குளிப் பதையே விட்டுவிட்டான். தலை மயி ரெல்லாம் கூடச் சடையாகிவிட்டது.

“இந்தச் சமயத்தில் மனைவி தொந் திரவும் சேர்ந்து விட்டது. வீட்டில் தினம் ரகளைதான். ஒரு நாள் வெளி யே சென்ற கணவன் உள்ளே வரும் பொழுது, அவன் உள்ளே வராதபடி கதவைக் கூடத் தாளிட்டுக் கொண் டாள். அப்பொழுது மார்கழி மாத மானதால் குளிர் வெடவெட வென்று எல்லோரையும் ஆட்டிச் சித்திரவதை செய்து கொண்டிருந்தது. சங்கரன் உடல் அப்படியே அவமானத்தாலும் குளிராலும் குன்னிப் போய்விட்டது. பலர் வந்து தன் மனைவிக்கு நேரில் சமாதானம் செய்வதை நேரில் காண வேண்டுமென்றால்?

“சில காலத்தில் தன் இளைய குமார னுக்கு இரண்டு பெண்டாட்டிகள் என்று அறிய அவன் மனம் மிகவும் கலங்கியது. மூத்த குமாரன் இன் னும் பிரம்மச்சாரி!

“இவன் கஷ்டங்களுக் கெல்லாம் சிகரம் வைத்தாற்போல இவன் வெளி யில் செல்லும்பொழுது பலர் இவனைக் கண்டு, “பைத்தியக்காரன்” “பித் தன்” என்றெல்லாம் பரிகாசம் செய்ய ஆரம்பித்தார்கள். இவனால் இதைத் தாள முடியவில்லை, உலகத்தையே வெறுத்துக் கிளம்பி விட்டான். கிள ம்பினதுதான் கிளம்பினானே, ஏதோ இரண்டு வெள்ளிப் பாத்திரம், கெட்டி நகை எடுத்துக்கொண்டு கிளம்பக் கூடாதோ? கட்டின முழத்துண்டு டன் கிளம்பி விட்டான்.

“இவன் உலகத்தையே எவ்வளவு வெறுத்த போதிலும், வயிறு கேட் குமா? பசி உயிரைப் பிடுங்கியது. சோற்றுக்கு வழி தேடலா னான். ஏதேதோ தொழில்களை எல் லாம் செய்தான். வளையல் கடைக் காரனிடம் வேலைக்குச் சென்றான்; விறகு வெட்டினான்; கூலி வேலை செய்தான். ஒன்றும் சரிப்பட்டு வர வில்லை. கடைசியில் மனம் நொந்து உலகத்தை விட்டு மறைந்துவிட விஷ த்தையும் உட்கொண்டான். ஆனால் எல்லாம் நினைத்தது போலா நடக் கின்றது? இவன் தலையில்தான் இன் னுமிருக்க வேண்டுமென்று எழுதி இருக்கின்றதே! ஆதலால் விஷங்கூடத் தன் வேலையைச் சரியாகச் செய்ய வில்லை.

“பார்த்தான் சங்கரன். பிறகு வேறு விதியின்றி, சந்நியாஸ வேடம் பூண்டு, கையில் ஓட்டை ஏந்திக் கொண்டு பிச்சை எடுக்கவும் ஆரம்பித் தான்.

“அவனுக்குத் திடீரென்று தன் குழந்தைகளின் ஞாபகம் வந்துவிட வீடு திரும்பினான். ஆனால் இவன் குமாரர்களோ இவனை அறவே மறந் தவர்களாய்த் தங்கள் கருமத்திலேயே கண்ணாயிருந்தனர். கிழவன் பார்த் தான். கோபமும், ஆத்திரமும் பொத் துக்கொண்டுதான் வந்தன. ஆனால் என்ன பயன்? சிறுவர்களாக இருக் கும்பொழுதே அடக்க முடியவில்லை;

வயது முதிர்ந்த பிறகா அடக்க முடியும்?...வேறு விதியின்றி, தங்க இடம் கொடுத்தால் போதுமென்று அங்கேயே தங்கிவிட்டான். இன்னும் அப்படியேதானிருந்து வருகின்றான்..." என்று அவன் கதையை விரிவாகச் சொன்னான்.

கஷ்டப்பட்டவனுக்கல்லவோ கஷ்டத்தின் அருமை தெரியும் ஸ்வாமி! நான் நிஜமாகவே சங்கரனுக்காகப் பரிதாபப் பட்டேன்.

"கண்ணா! அவன் எங்கிருக்கின்றான்?" என்று அவனிருப்பிடத்தைக் கேட்டேன். எப்பொழுதாவது சௌகரியப்பட்டால் ஆஜிசாரிந்து லாமல்லவா?

கண்ணன் என்னைப் பார்த்து எளனச் சிரிப்பு சிரித்தான். எனக்கு அதன் பொருள் விளங்கவில்லை.

"ஜாகையா? ......அவனிருப்பது கைலாஸம்" என்று மெதுவாகச் சொன்னான்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. 'தத்துபித்து' என்று அவனை நோக்கினேன்.

"சங்கரன் வேறு யாருமில்லை...அப் பேர்ப்பட்ட சிவபெருமான் தான்..." என்று 'கொல்'லென்று சிரித்தான் கண்ணன்.

முன் விலை ரூ. 7—8—0

இப்பொழுது பாதி விலை ரூ. 3—12—0

ரோல்ட்கோல்டு ரிஸ்ட்வாட்சு நெ. 44 ரூ. 3—12—0



படத்தில் காண்பதுபோல் மிகவும் அழகான கைக்கெடியாரங்கள் உயர்ந்த ஸ்விஸ் மேக்கர் லீவர் மூமெண்ட் உள்ளது. உறுதியான சாமான்களால் தயார் செய்யப்பட்டது. சரியான மணியைக் காட்டும். இந்த லீவர் கெடியாரம் வாங்கினால் என்றும் ரிப்பேர் கவலையில்லாமல் இருக்கும். பார்வைக்கு அசல் தங்கக் கெடியாரம் போல் கையில் கட்டிக்கொள்வோருக்கு வெகு அழகுள்ளது. இதில் காட்டியபடி எந்த மாதிரி (Round, Square, Rectangular shapes) கெடியாரங்கள் வேண்டுமானாலும் அனுப்பப்படும். குறைந்த விலை ரூ. **3—12—0** 3 வருஷம் கியாரெண்ட். சீக்கிரம் முந்துங்கள்.

வெஸ்ட்ரன் ஸ்விஸ் வாட்ச் கம்பெனி,
போஸ்ட் பாக்ஸ் நெ. **68**, மதராஸ்.

WESTERN SWISS WATCH Co.,
Direct Importers, Post Box No. 68, MADRAS.

நதி:—

கூத்தாடும் கெட்டில்

(எஸ். பாலசுப்பிரமணியம்)

ஜப்பானில் கோடோகோ என்ற ஒரு பாதிரி இருந்தார். அவர் ஒரு நாள் புத்தர் கோவிலை விட்டு வெளியே வரும்போது, துருப்பிடித்து அழுக்கடைந்த ஒரு கெட்டில், குப்பை மேட்டின் மேல் கிடப்பதைப் பார்த்தார். கோடோகோ பணம் அகப்பட்டால் அதை முடிச்சுப் போடும் கிழட்டுப் பேர்வழி; கெட்டிலை வீட்டிற்கு எடுத்துச் சென்று, பளபளவென்று பிரகாசிக்கும் வரையில் அதைத் தேய்த்தார். பிறகு அதில் ஜலத்தை விட்டு அடுப்பின் மேல் வைத்தார். வெந்நீர் பொங்க ஆரம்பிக்கவே, கெட்டில் பாடத் தொடங்கியது. அதன் மூடி தாளம் போட்டது.

கெட்டிலை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்த கோடோகோவுக்கு திடீரென்று தலை சுற்றவாரம்பித்தது. அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. காரணம் என்ன தெரியுமா? கெட்டிலுக்கு ஒரு தலையும், நாலு கால்களும், ஒரு வாலும் தோன்றின. அது ஒரு கொள்ளிப் பிசாசு என்று கோடோகோவுக்குத் தெரிந்து விட்டது. தன் பிள்ளையைக் கூப்பிட்டு, அவன் உதவியுடன் கெட்டிலைத் தடியால் அடித்து, அதை ஒரு பெட்டியில் அடக்கி வைத்து விட்டார். கிழட்டுப் பாதிரிக்குப் பாதி உயிர் போய் விட்டது.

மறு நாள் காலையில் கோடோகோ மெதுவாகப் பெட்டிக்குள் குனிந்து பார்த்தார். அடேடே! கெட்டில் குப்பை மேட்டில் எவ்வளவு சாதுவாக இருந்ததோ, அதே மாதிரியாகவல்லவா இப்பொழுதும் இருந்தது! ஆனால் பாதிரிக்கு அதன் மேல் இருந்த நம்பிக்கை அடியோடு ஒழிந்து விட்டது. "இந்தச் சனியனை ஒழித்து விட்டுத்தான் மறுகாரியம் பார்க்க வேண்டும்" என்று தீர்மானித்தார். பழைய பாத்திரங்கள் வாங்கும் ஒருவனைக் கூப்பிட்டு, அந்தக் கெட்டிலைக் காண்பித்தார். ஓரணா அவனிடம் ஜாஸ்தி வாங்குவதற்கு அவனுடன் அரைமணி நேரம் வாதாடிப் பார்த்தார். ஆனால், பாத்திரக்காரன் அவரைவிடப் பலே பேர்வழி; ஒரு தம்பிடி அதிகம் கொடுத்து விட்டு, கெட்டிலைப் பெட்டியுடன் தன் வீட்டுக்குத் தூக்கிச் சென்றான். அடேயப்பா! பாதி வழி போகும்போது ஒரு யானைக் குட்டி அப் பெட்டியில் உட்கார்ந்தாற் போலிருந்தது. தள்ளாடித் தள்ளாடி வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். உடனே பெட்டியைத் திறந்து பார்த்தான். அதில் லேசான ஒரு பழம் கெட்

டில்தான் இருந்தது. ஒன்றும் புரியாமல் தலையைச் சொரிந்து கொண்டு, படுத்துக் கொண்டான்.

இரவு பன்னிரண்டு மணியிருக்கும். சல சல வென்று சப்தம் கேட்கவே பாத்திரக்காரன் திடுக்கிட்டு எழுந்திருந்தான். அவன் பார்த்த காட்சி மாரைப் படபட வென்று அடிக்கச் செய்தது. கெட்டில் பாதிரி வீட்டில் எப்படிக் கூத்தாடிற்றோ, அதைவிட மும்மரமாக நர்த்தனம் செய்ய வாரம்பித்தது. கொள்ளிப் பிசாசின் கண்களைப் பார்த்து, பாத்திரக்காரன் நடு நடுங்கி விட்டான். ரயில் வண்டியின் பின்புறம் இருக்கும் சிகப்பு விளக்குகளைப் போல் ஜ்வலித்தன. அவன் மேலிருந்து வியர்வை ஆறாக ஓடிற்று. தன் போர்வையை முகத்தின் மேல் இழுத்துப் போர்த்துக் கொண்டு தூங்கி விட்டான்.

மறு நாள் காலையில் பாத்திரக்காரன் பெட்டியில் பழைய கெட்டிலைத் தவிர வேறொன்றையும் பார்க்க வில்லை. வெகு நேரம் ஆலோசித்தான். அவன் யோசித்து, யோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்குள் முப்பது கப் டீ சாப்பிட்டு விட்டான்.

என்ன முடிவு செய்தான் தெரியுமா? ஒரு நாடகக் கொட்டகை கட்டுவதென்று தீர்மானித்தான். ஒரு மாதத்துக்குள் கொட்டகையும் கட்டியாகி விட்டது. கொட்டகைக்கு முன்னால் ஒரு பெரிய நோட்டீஸைத் தொங்க விட்டான். "நாளை முதற் கொண்டு இங்கு கொள்ளிப் பிசாசு நடனமாடும். டிக்கட் ஒன்று 2 ரூபாய்!" என்ற விளம்பரம் காணப்பட்டது.

மேலே வளர்ப்பானேன்? ஆறு மாதமாக கொட்டகையில் கூட்டம் தாங்க முடியவில்லை. கெட்டில் பிசாசின் நர்த்தனத்தை ஜப்பானியர் எல்லோருமே பார்த்து அனுபவித்தார்கள். பாத்திரக்காரன் ஒரு கோடி ரூபாய் சம்பாதித்து விட்டான். ஆனால், இப் பணத்தைச் சேர்த்ததும் கெட்டில்காரனுக்குக் கொஞ்சம் பீதியுண்டாகி விட்டது. பிசாசினால் சம்பாதித்த பணம் நிலைத்து நிற்காதே என்ற யோசனை யுண்டாகி விட்டது. புத்த பகவானைத் திருப்தி செய்தால், அவர் தன்னை மன்னித்து விடுவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஆகையால் தான் சம்பாதித்த பாதிப் பணத்தையும், கெட்டிலையும் புத்தர் கோவிலுக்கே அனுப்பி விட்டான்.

ஆனால், அந்தக் கெட்டிலும் பணமும் யாரிடம் போய்ச் சேர்ந்தன என்று நினைக்கிறீர்கள்? கோடோகோ விடம்தான் என்றால் உங்களுக்கு ஆச்சரியம் உண்டாகுமா, இல்லையா?

தாலூக்கா போர்டு - - பிரஸிடெண்ட்

(எம். எஸ். சுந்தரேச ஐயர்)

ஒரு சிற்றாறு; மேற்கேயிருந்து கிழக்கே ஓடுகிறது; அதன் இரு பக்கங்களிலும் ஏராளமான தென்னைமரங்களும், மாமரங்களும் வானத்தை யளாவி நிற்கின்றன; கார்காலமான படியால் மழை பெய்து, ஜனங்களுடைய வயலும், மனமும் குளிர்ந்திருந்தன. வாலிபர்களும் வயோதிகர்களும், அங்கும் இங்கும், உற்சாகமாகப் போய்க் கொண்டிருந்தனர்.

2

பருத்த சரீரமும், சுருட்டை மயிருடனும் ஒருவர் அவர்களுக்கு வேலை செய்ய உத்திரவிட்டுக் கொண்டிருந்தார்; அவர்தான் ராவ்பஹதூர், வீராசாமி ரெட்டியார்; தாலுக்கா போர்டு பிரஸிடெண்ட்; ஜில்லாபோர்டுகள் ஆவதற்கு முன்னர் தாலூக்கா போர்டுகள் அல்லவா? ரெட்டியார் பணக்காரர்; ஆனால் படிப்பு வாசனை இல்லாதவர்; வயது நாற்பது இருக்கும்; தாலுக்கா போர்டு பிரசிடெண்டாக வருவதற்கு எவ்வளவோ பாடு பட்டார். "துரைத்தனத்தார் அளிக்கும் கௌரவப் பட்டங்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது; அந்நிய நாட்டுத் துணியைப் பகிஷ்கரிக்க வேண்டும்; மக்கள் பணத்தை அநியாயமாகக் கொள்ளை அடிக்கக் கூடாது, மது அரக்கனை ஒழிக்க வேண்டும்; தீண்டாமை கூடாது; கதராடை அணிய வேண்டும்; திரிகரணசுத்தியோடு தேசத்திற்காக உழைத்து அஹிம்ஸா முறையைக் கைப்பற்றி வாழ்க்கையை நடத்த வேண்டும்" என்று நமது தேசிய காங்கிரஸ் சொல்லுகிற படியால் அதனிடம் அவருக்கு வெறுப்பு அதிகம்.

3

எலக்ஷன் வந்தது. காங்கிரஸ் காரருக்கு இடம் கொடுக்கக் கூடாதென்று எண்ணினார்; பெட்டியைத் திறந்து எடுத்தார் லக்ஷ ரூபாயை! தரித்திரத்தில் மூழ்கிக்கிடக்கும் பாமர மக்களுக்கு பண ஓசையைக் காட்டினார்! அந்த ஓசையில் ஏழைகளுக்கு ஆசை உண்டாயிற்று!

4

வயிற்றுக்குக் கஞ்சி யில்லாதவர்களும், சுயகாரியப் புலிகளும், லஞ்சப் பேய்களும், வஞ்சகக்காரர்களும், படிப்பில்லாதவர்களும், குலாம் கோஷ்டியினரும் ஓட் செய்த காரணத்தால் காங்கிரஸ் கட்சிக்கு 34567 ஓட்டுகளும், நமது ரெட்டியாருக்கு 34577 ஓட்டுகளும் பதிவு செய்யப்பட்டன. ஒரு தாலூக்கா போர்டு மெம்பரானார்! மற்ற அங்கத்தினர்களை எம்முறையில் வசப்படுத்த வேண்டுமோ அம்முறையில் வசப்படுத்திக் கொண்டார். தாலூக்கா போர்டு பிரஸிடெண்ட்வேலை கிடைத்து விட்டது.

5

காங்கிரஸ்காரர் வெட்கப்படும்படி கல்வித் துறையில் சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று எண்ணினர். படிப்போ கிடையாது. போதிய அறிவோ இல்லை. பெரி

யோர்களது நட்போ இவருக்குப் பூஜ்யம். பணம் இருந்தால் மாத்திரம் போதுமா? சாமர்த்தியம் வேண்டாமா?

6

தன் காரை எடுத்துக் கொண்டு அடுத்த கிராமத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தைப் பார்வையிடச் சென்றார். அது ஒரு சிறு பள்ளிக்கூடம். ஐந்து வகுப்புகள் உண்டு; மூவர் உபாத்தியாயர்; திடீரென்று வகுப்பில் நுழைந்தார்; கணக்கு நடந்து கொண்டிருக்கிறது "ஐந்துடன் எதைக் கூட்டினால் எட்டாகும்? பதினொன்றும், ஒன்பதும் என்ன? பதிமூன்று மாடுகளுக்கு எத்தனைகால்? அறுபத்து மூன்று பழங்களை எழு பிள்ளைகளுக்குக் கொடுத்தால் ஒருவனுக்கு என்ன கிடைக்கும்?" என்று இப்படிச் சில கேள்விகளை உபாத்தியாயர் கேட்டு, மாணவர்களிடமிருந்து விடைகளை வரவழைத்துக் கொண்டிருந்தார்.

7

"இவரென்ன உபாத்தியாயரா? ஒரு இழவும் தெரிய வில்லையே! எல்லாம் பிள்ளைகளையே கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறாரே!" என்று எண்ணி விட்டார் ரெட்டியார்! வந்து விட்டதையா கோபம்! "இவைகளெல்லாம் தெரியாத உனக்கு யாரையா வேலை கொடுத்தது? தெண்ட சம்பளம்! பள்ளிக் கூடங்களை நேரே பார்வையிட்டாலல்லவோ இந்த ஊழல்கள் தெரிய வரும்" என்று கோபித்துக் கொண்டே ஊர் வந்து சேர்ந்தார். இவரல்லவா பிரசிடெண்ட்! அடுத்த நாள் அவ்வுபாத்தியாயர் வேலையிலிருந்து நீக்கப்பட்டாரென்று பத்திரிகை மூலம் தெரிய வந்தது!

8

இன்னொரு கிராமம். அங்கு ஒரு பள்ளிக்கூடம்; அதையும் "விஸிட்" செய்தார் ரெட்டியார்; உபாத்தியாயர் நாற்காலியில் தூங்குகிறார். பிள்ளைகள் வழக்கம் போல் உபத்திரவமின்றி விளையாடுகிறார்கள். ஒரே கூச்சல். திடீரென்று பிரசிடெண்ட் உள்ளே வந்தார். சட்டாம் பிள்ளை உபாத்தியாயரை ஜாடையாகத் தட்டினான். உடனே உபாத்தியாயர் பிள்ளைகளைப் பார்த்து, "ஒருவரும் இவ்வாறு தூங்கிவிழக் கூடாது! சுறு சுறுப்பாக இருக்க வேண்டும். வேகம், கவனம், முயற்சி இவைகளைக் கைப்பற்ற வேண்டும். நன்றாக வாசிக்க வேண்டும். எழுத்து முத்தைப் போல் சுத்தமாக இருக்க வேண்டு" மென்று விட்டார் ஒரு பிரசங்கத்தை! என்னே! உபாத்தியாயரின் திறமை! தந்திரம்!! ரெட்டியார் திகைத்துப் போய் விட்டார்! "விஸிட்" செய்த மறுதினமே அவ்வுபாத்தியாயருக்குப் பத்து ரூபாய் "பிரமோஷன்" கொடுக்கப் பட்டதாம்.

9

பிரசிடெண்ட் வேலை கிடைத்த இரண்டு மாதங்களுக்குள் தாலுக்கா போர்டுகள் "அபாலிஷ்" செய்யப் பட்டன. ஜில்லா போர்டுகளின் தோற்றம்; காங்கிரஸ் பிரசிடெண்ட்டுகள் உத்தியோகத்திற்கு வந்து விட்டனர். திவான்பஹதூர் வீராசாமி ரெட்டியார் 'இதற்குத்தானா லக்ஷரூபாய் செலவழித்தேன்! ஐயோ! தெய்வமே, உனக்குக் கண்ணில்லையா!' என்று சொல்லிவருந்துகிறார்; என்ன செய்யலாம்! பாவம், தெய்வத்திற்குக் கண் இருக்கிறதே!

துக்கடாக் கதை

"ரேவதி"

சாரங்கபாணி ஐயங்காரின் பிள்ளை நரஸிம்மன் லீவுக்கு வந்திருந்தான். அவன் லா காலேஜ் மாணவன். இன்னும் கல்யாணம் ஆகவில்லை.

ஒரு புதன்கிழமை காலை; பேப்பர் பையன் சந்தாதாரரான சாரங்கபாணியிடம் அன்றைய பேப்பரைக் கொடுத்துவிட்டுப் போனான். புதுப் பேப்பரைப் பிரித்ததும், முதல் பக்கத்தில் "மாட்ரிமொனியல் காலம்" தான் சாரங்கபாணியின் கண்ணில் தற்செயலாய்ப் பட்டது. அதில் "பதினெட்டு வயதுள்ள ஒரு படித்த கட்டழகிக்கு பி. ஏ. பாஸ் செய்த ஒரு பணக்கார மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளவும்" என்ற ஒரு விளம்பரம் இருந்தது. சாரங்கபாணி அதை அலக்ஷியமாகப் பார்த்துவிட்டு, யுத்தச் செய்திகளை ஸ்வாரஸ்யமாகப் படித்தார். கொஞ்ச நேரத்தில் பேப்பரை மேஜை மேல் வைத்துவிட்டு பக்கத்திலிருந்த 'ஈஸி'சேரில் சாய்ந்து கொண்டார்.

அவர் பேப்பரை வைத்தவுடன் நரஸிம்மன் அங்கே வந்து அந்தப் பேப்பரைப் புரட்டினான். முதல் பக்கத்தில் அவன் எதையோ, கண் கொட்டாமல் பத்து நிமிஷங்கள் வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்தான். சாரங்கபாணி இதைக் கவனித்தார்.

திடீரென்று நரஸிம்மன், "அப்பா, என் ஜாதகம் எங்கே இருக்கு? எனக்கு ஒரு காப்பி வேணும்" என்றான்.

அவருக்கு விஷயம் புரிந்துவிட்டது.

"ஜாதகமா?......எதுக்கு? கைப் பெட்டியில்தான் இருக்கும்..." என்று ஒரு மாதிரியாகச் சொன்னார்.

நரஸிம்மன் பெட்டியிலிருந்து தன் ஜாதகத்தை எடுத்து ஒரு நகல் எடுத்துக் கொண்டான். உடனே யாருக்கோ ஒரு கடிதமும் எழுதினான். ஜாதகத்தையும் கடிதத்தையும் கவருக்குள் வைத்து, கவரின் மேலே, பேப்பரின் முதல் பக்கத்தைப் பார்த்துப் பார்த்து விலாசம் எழுதினான். தானே போய் 'போஸ்ட்' பண்ணிவிட்டும் வந்தான். சாரங்கம் இத்தனையும் கவனித்துக் கொண்டுதானிருந்தார்.

நரஸிம்மன் பேருக்கு வரும் தபால்களைத் தன்னிடமே கொடுத்துவிடவேண்டும்—என்பது தபால்காரனுக்கு சாரங்கத்தின் ரகஸிய உத்தரவு. நான்கு நாளாயிற்று. ஐந்தாம் நாள் நரஸிம்மனுக்கு வந்த ஒரு கடிதம் சாரங்கத்தின் கையில் சிக்கியது. அவசரமாகப் பிரித்துப் பார்த்தார்.

அது பிடாரியூர் அகமுடையாள் உபாஸி ஸ்ரீமான் அழுமூஞ்சி ஜோஸ்யரிடமிருந்து வந்த நரஸிம்மனின் ஜாதக பலா பலன்கள். சாரங்கம் அதைப் படித்தபோது, "தற்சமயம் உங்கள் பெற்றோருக்கு ஒரு ஏமாற்றம் காத்திருக்கிறது" என்று ஒரு குறிப்பைக் கண்டதும் அவர் முகத்தில் அசடு தட்டியது. எதையோ நினைத்துக் கொண்டு அவசரமாகப் போய், புதன்கிழமை வந்த பேப்பரைப் பார்த்தார். "மாட்ரிமொனியல் கால"த்துக்குப் பக்கத்தில் பிடாரியூர் ஜோஸ்யரின் விளம்பரம் காணப்பட்டது. அதில் "ஜாதகம் அனுப்புகிறவர்களுக்கு ஒரு வாரபலன் இலவசமாக எழுதியனுப்பப்படும்"—என்று கொட்டை எழுத்தில் ஒரு வரியும் இருந்தது.

கடைசிவரம்

"மாயாவி"

சாஸ்வதியும், டாக்டர் விஜயராகவனும் மனமொத்த தம்பதிகள். விவாகமாகி ஐந்து வருஷங்கள் வரையிலும் அவர்கள் மிகவும் சந்தோஷமாக இல்வாழ்க்கை நடத்தி வந்தனர்.

இப்படி சந்தோஷ வாழ்க்கை நடத்தி வந்த அவர்கள் மனதிலும் குழந்தை இல்லையே என்ற ஒரே ஒரு குறை இருந்தது. ஆனால் அந்த வருஷத்தில் கடவுள் அக்குறையையும் நீக்கினார். சீக்கிரம் சரஸ்வதி கர்ப்பமானாள். விஜயராகவன் மனதும் சந்தோஷமடைந்தது. தான் கர்ப்பமானதிலிருந்து தன்னை, அவர் முன்னிலும் அன்பாக நடத்துவதைக் கண்டு பெருமை கொண்டாள் சரசு.

ஆனால் யார் செய்த பாபமோ, சரஸ்வதி கர்ப்பமான சில மாதங்களில், அவளுக்கு க்ஷயரோகம் பிடித்துக் கொண்டது. விஜயராகவன் சரஸ்வதியின் வியாதியைப்பற்றி அறிந்ததும் இடி விழுந்தது போலானான். அவனுக்குத் தெரியும், இந்த வியாதி வந்தவர்கள் அநேகமாகப் பிழைப்பதில்லையென்று. "ஈச்வரா, எங்கள் சந்தோஷத்திற்கு இவ்வளவு சீக்கிரமே முற்றுப் புள்ளி வைத்து விட்டாயா?" என்று நினைத்து உருகினான்.

சரஸ்வதிக்கு அளவு கடந்த பீதியும், வருத்தமும் ஏற்பட்டது. "அவருக்கு வேண்டிய பணிவிடைகளை என்னால் செய்ய முடியவில்லையே. வீட்டு வேலைகளெல்லாம் அப்படி அப்படியே கிடக்கின்றனவே" என்று எண்ணிக் கண்ணீர் பெருக்கினாள்.

விஜயராகவன் தன்னாலியன்ற மட்டும் அவ்வியாதியை குணப்படுத்த மருந்துகள் கொடுத்தான். ஆனால் அவள் வியாதி கொஞ்சமும் குறையவில்லை. பூர்ண கர்ப்பமாயிருந்த அவள் நாளடைவில் படுத்த படுக்கையாய் விட்டாள். விஜயராகவன் பெரிய பெரிய வைத்தியர்களையெல்லாம் வரவழைத்து சரஸ்வதிக்கு சிகித்சை செய்தான். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. அவள் வியாதி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தது.

2

இம்மாதிரி வியாதி முற்றியிருந்த சமயத்தில் சாஸ்வதிக்குப் பிரசவ காலமும் சமீபித்தது. அநேக மருத்துவச்சிகளும் பெயர்பெற்ற டாக்டர்களும் அவளை கவனிக்க ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும் சரஸ்வதி பிழைப்பாளோ மாட்டாளோ என்பதே சந்தேகமாயிருந்தது. ஆனால் தெய்வச் செயலால் அவளுக்கு சொர்ணவிக்ரகம் மாதிரி ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

புத்திரனைக்கண்டு கணவனும் மனைவியும் பூரித்துப் போயினர். ஆனால் சரஸ்வதியின் நிலைமை மிகவும் மோசமாகப் போய்விட்டது. அன்றிருந்து அவள் அருகிலே இருந்து ராப்பகலாய் கண் விழித்து அவளுக்கு சிச்ருஷை செய்தான் விஜயராகவன். அவன் தேகம் இளைக்க ஆரம்பித்தது. வேளா வேளைக்குச் சாப்பாடு கிடையாது. எப்பொழுதாவது பசிக்கிறது என்று இலையின் முன்போய் உட்கார்ந்தானால்—அந்த சமயற்காரன்—சமையலுக்குப் புதிது போலிருக்கிறது—அவன் பண்ணியிருக்கும் சமையல் விஜயராகவனுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்காது.

என்ன செய்வான்! எப்போ பார்த்தாலும் அவளைப்பற்றிய கவலைதான். "அவள் வியாதி எப்பொழுது குணமாகப் போகிறது? எப்பொழுது அவள் கையால் சாப்பிடப் போகிறேன். ஐயோ அவளிருக்கும் நிலைமையைப் பார்த்தால் பயமாயிருக்கிறதே. இந்தப் பச்சைக் குழந்தையையும் விட்டு விட்டு அவள் போய் விட்டால் நான் என்ன செய்வேன். நான் கொடுத்து வைத்தது இவ்வளவு தானு?"என்று எண்ணி வருத்தப்படுவான்.

அவன் நிலைமையைக் கண்டு சரஸ்வதிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. "ஐயோ, அவருக்கு ஒரு நல்ல சாப்பாடு கொடுக்கக்கூட நாதி இல்லையே. பாவி, எனக்குத்தான் உற்ருர் உறவினர் ஒருவரும் இல்லையென்ருல் அவருக்கும் கூடவா..." அப்பொழுது தான் அவளுக்கு ஞாபகம் வந்தது. "ஆமாம். அந்தப் பெண், சுலோச்சு. அவளும் நாதி இல்லாமல் தானே இருக்கிருள். அவளை இங்கே வரும்படி எழுதினுல் எல்லோருக்கும் சவுகரியமாயிருக்குமே" என்று எண்ணினுள்.

அவள் யோசனைப்படியே விஜயராகவன் தன் அத்தை பெண் சுலோச்சுவுக்கு ஒரு கடிதம் எழுதி அவளைப் புறப்படவரச் செய்தான்.

3

சுலோசனு ஓர் இளம் விதவை. அவளுக்கு ஆறு வயதில் கலியாணம் நடந்தது. ஒன்பதாம் வயதில் புருஷனை இழந்தாள். தன் பெண்ணின் தலைவிதியை நினைத்து நினைத்து ஏங்கி இறந்தாள் விஜயராகவன் அத்தையும், அவள் தாயாருமான சாலாட்சி. அவள் புருஷனுக்கு இந்தக் கண்ருவியெல்லாம் கண்டதும் பைத்தியம் பிடித்து விட்டது. விஜயராகவன் அவர் பைத்தியத்தைத் தீர்க்க என்னவெல்லாமோ வைத்தியம் செய்தும் பலிக்காமையால் அவரைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டு போய்விட்டான்.

சுலோச்சுவின் ஏராளமான சொத்துக்களை அவர்கள் குடும்ப வக்கீலே மேற்பார்வை பார்த்து வந்தார். அவள் பத்தாவது வகுப்புவரையில் படித்திருந்தாள். சுலோச்சு நல்ல கட்டழகி. அதிலும் பருவமும் சேர்ந்துகொண்டது. அடக்கமான குணமுள்ளவள். பொறுமையே உருவாய் வந்த அவளைக் கண்டதும் சரஸ்வதிக்கு துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது. "பதினுறு வயது நிறம்புவதற்குள் உனக்கு வைதவ்யப் பட்டமா? உன் வாழ்க்கை பூராவும் உனக்குத் துன்பக்கடலா" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

சுலோச்சு வந்த பிறகு சரஸ்வதிக்குத் தன் கணவனைப்பற்றிய கவலை கொஞ்சம் குறைந்தது. வீட்டு வேலைகள், தன் கணவனுக்கு வேண்டிய சிச்ருஷைகள், தனக்கு வேண்டிய உதவிகள், குழந்தையைக் குளிப்பாட்டுவது, பால் போட்டுவது, தூங்கப்படுத்துவது வரையில் சகல வேலைகளையும் ஒருவித மனத்தாங்கலுமில்லாமல், சந்தோஷத்துடன் செய்து வந்த சுலோச்சுவின் குணத்தைக் காணக் காண சரஸ்வதிக்கு அவள் பேரில் அதிக பற்றுதல் ஏற்பட்டது. "அம்மா, சுலோச்சு! எவ்வளவு கஷ்டப்படுகிருய்! கொஞ்சம் இளைப்பாறிக்கொள்ளம்மா" என்று அன்பாகச் சொல்லுவாள்.

4

உண்மையிலேயே சுலோச்சுவுக்கு அவர்கள் குடும்பத்தின் பேரில் அடக்க முடியாத ஒரு பாசம் ஏற்பட்டிருந்தது. நாளடைவில் அந்தப் பாசம் அவள் மனதில் ஓர் முக்கிய ஸ்தானம் வகித்துவிட்டபடியால் தன் அம்மாஞ்சிக்கும், அவன் மனைவி, குழந்தைக்கும், தான் உழைக்கவேண்டியது தன்

னுடைய இன்றி அமையாத ஓர் கடமையாகும் என்று எண்ணினுள்.

இவ்வாறு அவளுக்குப் பாசம் ஏற்பட்டதற்கு முக்கிய காரணம், அவளுடைய பருவமும், விஜயராகவனின் கவர்ச்சி மிகுந்த அழகுமே யாகும்.

ஆதி முதலே அவளுக்கு விஜயராகவன் பேரில் ஓர் விசேஷ பற்றுதல். மேலும் தன் குடும்ப விஷயங்களை, தனக்கு ஒருவித கவலையும் கொடுக்காதபடி ஒழுங்கு செய்ததைப் பற்றி அவள் மிகவும் நன்றியுள்ளவளாகவே யிருந்தாள்.

ஆகவே விஜயராகவன் லெட்டர் கிடைத்ததும் உடனே புறப்பட்டு வந்தாள். நாலு வருஷமாக விஜயராகவனை அவள் பார்க்கவில்லை. இப்பொழுது அவனைக் கண்டதும் அவள் மனதில் ஏதோ புதிய உணர்ச்சி ஒன்று தோன்ற ஆரம்பித்தது. நாளடைவில் அவனிடம் நெருங்கிப் பழகப் பழக அவளுக்கு அவன் ஓர் தெய்வமாகத் தோன்றினுன்.

5

சரஸ்வதிக்கு திடீரென்று ஒரு நாள் முகத்தில் சற்று தெளிவு ஏற்பட்டது. உடம்பிலும்கூடக் கொஞ்சம் தெம்பு காணப்பட்டது. விஜயராகவனுக்கு அது பெரும் கலக்கத்தைக் கொடுத்தது. "சரி அவ்வளவுதான் நான் கொடுத்து வைத்தது. சரஸ்வதியின் வாழ்வெல்லாம் இனி ஒரு நாளோ இரண்டு நாளோ. கடவுளே, என்னையும் இந்த ஒரு வயதுக் குழந்தையையும் தவிக்கவிட்டுச் செல்லப் போகிருளே. நாங்கள் என்ன செய்யப் போகிறோம்" என்று கண்ணீர் பெருக்கினுன்.

அன்று மாலை சரஸ்வதி ஏதோ பிரமாதமாக ஆலோசனை செய்து கொண்டிருந்தாள். அச்சமயம் குழந்தை ராஜு கையில் ஒரு படத்துடன் அவளிடம் ஓடி வந்தான்.

"அம்மா, அம்மா......"

சரஸ்வதி அவனை அணைத்துக் கொண்டே கையிலிருக்கும் படத்தைப் பார்த்தாள். அது அவள் கணவனுடைய படம். அப்படத்தையும், குழந்தையையும் மாறி மாறிப் பார்த்தாள். "ஐயோ நான் போய்விட்டால் இவர்களை யார் கவனிக்கப் போகிருர்கள்?" என்றெண்ணினுள்.

அச்சமயம் குழந்தை ராஜு, "அம்மா சித்தி இந்தப் படத்தை பார்த்துட்டு அழுரும்மா. எதுக்கம்மா அவ அழுரு? சொல்லேன்" என்று தன் மழலைச் சொற்களால் கொஞ்சினுன்.

சரஸ்வதிக்கு அவள் அழுகையின் காரணம் விளங்கிவிட்டது. அவள் வெகு நேரமாக யோசனை செய்து கொண்டிருந்த பிரமாத சங்கதியைக் குழந்தை ஒரு நிமிஷத்தில் தீர்த்துக் கொடுத்துவிட்டான்.

கடைசியில் தனக்காகக் கஷ்டப்பட்ட எல்லோரும் சந்தோஷமடையும் ஒரு வழியை அவள் கண்டு பிடித்து விட்டாள். அவள் மனம் எல்லையற்ற ஆனந்தத்தை அடைந்தது.

6

ஆனல் வியாதி அதன் கடமையைச் செய்து விட்டது. மறுநாளே சரஸ்வதியின் நிலைமை நம்பமுடியாததாய் விட்டது. சரஸ்வதி தன் நினைவையே இழந்துவிட்டாள். விஜயராகவன் வாடிய முகத்துடன் அவளருகில் உட்கார்ந்திருந்தான். அவன் கண்களில் கண்ணீர் அரும்பிக் கொண்டிருந்தது. அழுதுகொண்டிருந்த குழந்தையை சமாதானம் செய்து கொண்டிருந்தாள்

சுலோச்சு. அவள் முகத்திலும் தூக்கக் குறி காணப்பட்டது.

சிறிது நேரத்தில் சரஸ்வதி கண் விழித்தாள்.

தன் கணவனைப் பார்த்து "எனக்குக் கடைசி விருப்பம் ஒன்றிருக்கிறது. அதை நிறைவேற்றுவீர்களோ" என்றாள்.

அவள் தன் நினைவை இழந்ததால் ஏதோ புலம்புகிறாள் என்று நினைத்தான் விஜயராகவன்.

'என்ன மாட்டீர்களா?' என்று மறுபடியும் கேட்டவுடன்தான் அவனுக்கு அவள் நினைவுடன்தான் பேசுகிறாளென்று தெரிந்தது.

"ஆகட்டும். என்ன, சொல்லு சரஸ்வதி" என்றான்.

"நிச்சயமாக?" என்றாள் சரஸ்வதி.

"சத்தியமாகச் செய்கிறேன்" என்றான் அவன்.

சரஸ்வதி சுலோச்சுவை அருகே அழைத்து அவள் கையைப் பிடித்துத் தன் கணவன் கையில் வைத்து "இவள் அநாதை; விதவை. ஆனாலும், நம் குழந்தையையும் காப்பாற்றவும், உங்களை எனக்குப்பின் கவனிக்கவும், எனக்காக—என் கடைசி வேண்டுகோளுக்காக, இவளை நீங்கள் கலியாணம் செய்துகொண்டு, இவள் இருண்ட வாழ்வைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும்" என்றாள்.

விஜயராகவனும், சுலோச்சுவும் ஆச்சரிய மடைந்தனர். அவனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

"மாட்டீர்களா?" என்று நடுங்கிய குரலில் கேட்டாள் சரஸ்வதி.

"ஆகட்டும் சரசு. அப்படியே செய்கிறேன்." என்ற வார்த்தைகள் அவன் வாயினின்றும் உணர்ச்சியின்றி வெளிவந்தன.

சரஸ்வதியின் முகமும் மலர்ந்தது. கண்கள் மூடின.

ஜோதிஷ மகுட வர்த்தனர்
9—5—'38-ல் சென்னை ஜோதிஷர் மகாநாட்டின் சபைத் தலைவர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர், பீமகவி, சுகர்புஜண்டர், சாஸ்திர நிபுணர். ஜாதகம் கணிக்க ரூ-2. ஒரு வருஷத்திற்கு ஆதாயம் விரயம், குடும்பம், தொழில், கடன், ஆரோக்கியம், காதல், சத்துரு, பிரயாணம், சுபம், அதிர்ஷ்டம், மாதம், நாள், திக்கு, ரத்னம், நெம்பர், வேளை, உலோகம், புஷ்பம், லாட்டரி, ரேஸ், மற்றும் பலாபலன்கள் மாதவாரியாக எழுத ரூ-3. ஓர் திசைக்கு புத்திபலன் ரூ. 3. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை
புரபஸர் N. V. சுப்பிரமணியம், J. M., & J. A
நெ. 7, ஜோதிஷ ஆசிரமம், வாலாஜாபாத். P.O. (சென்னை)
வெளிநாடு வி. பி. கிடையாது. Walajabad. S. I. R.

கீழ்க்கண்ட இடங்களில்

பொது அறிவுப் போட்டிக் கூபன்கள்

ஸ்டாக் செய்யப்பட்டிருக்கின்றன.

வேண்டுவோர் இனமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

1. ஸிட்டி நியூஸ் ஏஜன்ஸி, 98. A. வாலாஜா ரோடு, மவுண்ட்ரோடு, மதராஸ். (தர்பார் ஹோட்டல் சமீபம்)
2. சுகானந்தாஸ்டால், பெரியகடை வீதி, கோயம்புத்தூர்.
3. எஸ். மாரியப்ப கோன், 42. வடக்கு சித்திரவீதி, மதுரை.
4. A. R. V. ராம், சாரதி நியூஸ் ஏஜன்ஸி, உறையூர். (திருச்சி.)
5. ஜி. வி. எம். சுந்தரம், நியூஸ் ஏஜண்டு, திருக்கோயிலூர்.
6. C. K. கணேசன், நேஷனல் நியூஸ் ஏஜன்ஸி, நாகர் கோயில்.
7. மஹாதேவ் அண்டு பிரதர்ஸ் நியூஸ் ஏஜண்டு திருவனந்தபுரம்.
8. K. V. சங்கபதி நாயுடு, நியூஸ் ஏஜண்டு, கரூர்.
9. B. V. ரெங்கசாமி நாய்க்கர், ஜெனரல் மர்ச்செண்ட், பவானி.
10. டி. எம். கருப்பண்ணன், நியூஸ் ஏஜண்டு, மானேஜியப்பா தெரு, தஞ்சாவூர்.
11. வஸந்தா நியூஸ் ஏஜன்ஸி, சௌராஷ்ட்ரபெட், பெங்களூர்சிட்டி.
12. M. A. லக்ஷ்மண பிள்ளை, கோல்டன் புக் ஸ்டால், கோல்லம்.
13. V. நயினர் செட்டியார், புக் ஸெல்லர், பஜார் தெரு, ஈரோடு.
14. மெய்வழிப் புத்தகசாலை, கல்லுக்கட்டி, காரைக்குடி.
15. ஏ. எஸ். முத்துகிருஷ்ணன், நியூஸ் ஏஜண்டு, Pay office Arumuga Mudaly st., வேலூர்.
16. என். நடராஜ முதலியார், நியூஸ் ஏஜண்டு, 50, வடக்கு ரதவீதி ஸ்ரீவில்லிபுத்தூர்.
17. கே. வேணுபிள்ளை, நியூஸ் ஏஜண்டு, திருநெல்வேலிடவுன்.
18. விநயகம் அண்டு கம்பெனி, பெஸண்டு ரோடு, கும்பகோணம்.
19. K. நாகராஜன், நியூஸ் ஏஜண்டு, தேனி.
20. K. சுடலை முத்து பிள்ளை, நியூஸ் ஏஜண்டு, கோபாலசாமி நாய்க்கர் தெரு, தூத்துக்குடி.
21. K. R. கோபாலன், நியூஸ் ஏஜண்டு, மாயவரம்.
22. டி. தம்பித்துரை, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம் (சிலோன்)
23. என். ஏ. கெ. எஸ். மொய்தீன், நுவாரெலியா (சிலோன்.)
24. ஆர். நாராயணசாமி ஆச்சாரி, பித்தளைபாத்திர வியாபாரம் திண்டுக்கல்.
25. T. S. வேணுகோபால், நியூஸ் ஏஜண்டு, 7/950, மெயின் ரோடு, சேலம்.

மற்ற எல்லா ஊர் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

அல்லது எமக்கே நேரில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

"சந்திரோதயம்" 60, தம்பு செட்டி தெரு, சென்னை

சந்திரோதயம்

“பொது அறிவு”ப் போட்டி—72

முடிவு தேதி 26—9—1940

பிரவேசக் கட்டணம் ஒரு கூபனுக்கு அணா 4.

ஒரு ரூபாய்க்கு ஐந்து கூபன்கள் அனுப்பலாம்.

போட்டியின் சரியான விடை ஸீல் போட்ட கவரில் சென்னை,

இந்தோ கமர்ஷியல் பாங்கியில் டெபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது

விடைகள் கண்டு பிடிக்க வேண்டிய விதம்:

வெள்ளைக் கட்டங்களில் தரப்பட்டிருக்கும் எண்களைப் பாருங்கள்! ஒவ்வொன்றிலிருந்தும் இடமிருந்து வலமாகவோ, அல்லது மேலிருந்து கீழாகவோ வார்த்தைகள் ஆரம்பிக்கின்றன. ஒரு எண்ணிலிருந்து ஆரம்பிக்கும் வார்த்தை எப்பக்கமாகச் செல்லுகிறதோ அப்பக்கத்திலுள்ள கறுப்புக் கட்டத்தின் முன் அது முடிவடையும். ஒவ்வொரு வெள்ளைக் கட்டத்திலும் ஒவ்வொரு எழுத்துத்தான் எழுதலாம்.

உதாரணமாக:—முதற் குறிப்பு, (இடமிருந்து வலமுள்ளது) ஆயுதம் என்றிருக்கிறது; கருவி சரியான விடை. இவ்விதமே மற்ற விடைகளையும் கண்டு பிடிக்கவேண்டும்.

மேலிருந்து கீழ் குறிப்பைப் பாருங்கள்—**கனல்** என்ற விடை சரியாக அமைகிறது.

'பொது அறிவு'ப் போட்டி—72



முடிவு தேதி 26—9—1940

இந்தப் "பொது அறிவு"ப் போட்டி 72-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப் படுத்துவ தென்றும் ஒப்புக் கொள் கிறேன்.

முழுப்பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ..................

போட்டி நிபந்தனைகள்

(1) ஒவ்வொரு விடைக்கும் **பிரவேசக் கட்டணம் அணா 4.** பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலம்தான் அனுப்பவேண்டும். சந்தாத் தொகை முதலிய வேறு எதுவும் இந்த மணியார்டருடன் சேர்த்து அனுப்பக்கூடாது. அந்தந்தப் போட்டிக்குத் தனித்தனி மணியார்டராக அனுப்ப வேண்டுமே யல்லாது ஒரே மணியார்டரில் ஒரு போட்டிக்கு மேற்பட்ட போட்டிகளுக்கு பிரவேசக் கட்டணத் தோகைகள் அனுப்பக்கூடாது.

உள்ளூர் வாசிகள் போட்டி முடிவு தேதியன்று மாலை 6-மணிக்குள் நமதாபீசிலுள்ள கவுண்டரில் கூபன்களைக் கவரில் அடக்கம் செய்து, கூபன் எண்ணிக்கையும் விலாசமும் மேல்கவரில் எழுதி பிரவேசக் கட்டணத்துடன் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

(2) ஒருவர் எத்தனை கூபன்களேனும் ஒரே கவரில் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொரு கூபனுக்கும் பிரவேசக் கட்டணம் அணா நான்கு செலுத்துவதுடன் பணம் அனுப்பியதற்கு அத்தாட்சியாக மணியார்டர் ரசீதும் சேர்த்து விடையுடன் அனுப்பவேண்டும்.

மணியார்டர் ரசீது இல்லாமல் வரும் கூபன்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா தென்பதை நேயர்கள் நன்கு கவனிக்க வேண்டும். மணியார்டர் கூபனிலும் விடையனுப்பும் கவர்மேலும் போட்டியின் நம்பரையும், அனுப்பப்படும் கூபன்களின் மொத்த நம்பரையும் எழுதவேண்டும். விடை கூபனிலும் மணியார்டர் கூபனிலும் விடை அனுப்புபவரின் பெயரும், முழு விலாசமும் தெளிவாக எழுதவேண்டும்.

(3) ஒன்றுக்கு மேற்பட்ட கூபன்கள் அனுப்புகிறவர்கள் கூபன்களில் வரிசைக் கிரமமாக நம்பர் போடவேண்டும்.

(4) விடைக் கூபன்களை மையினால் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். பென்சிலால் எழுதப்பட்ட கூபன்களும், கிழிந்த கூபன்களும், அடித்தல், திருத்தல்களும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

(5) விடைகள் முடிவு தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டும். முடிவு தேதிக்குப் பிறகும், அல்லது முடிவு தேதியில் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகும் வந்து சேரும் விடைகள் கவனிக்கப்படமாட்டாது.

(6) போட்டி ஆசிரியரின் விடைக்கு எழுத்துக்கு எழுத்து சரியான விடை அனுப்புபவருக்கு முதற் பரிசும், அடுத்தபடி சரியாயிருக்கும் விடை அனுப்புபவருக்கு இரண்டாவது பரிசும் முறையே மூன்றாவது பரிசும் அளிக்கப்படும். ஒன்றுக்குமேல் சரியான விடைகள் வந்தால் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும். எவருமே சரியான விடை அனுப்பாவிட்டால் கூடுமானவரையில் சரியான விடை அனுப்புபவருக்கு முதற்பரிசும், மற்றப் பரிசுகள் இதே முறையிலும் அளிக்கப்படும் ஒவ்வொரு தவறுள்ள வார்த்தையும் ஒரு பிழையாகக் கருதப்படும்.

